

கலைஞர் 100

1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 101 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 04 – திங்கள்கிழமை 20 நவம்பர் 2023 –சென்னை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 101: Thiruvalluvar Year - 2054 - Karthigai 04 - Monday 20 November 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## உச்சநீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது!

# ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக - தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு!

## அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் வாதிடுகின்றனர்!

**புதுடெல்லி, நவ. 20 -**

**ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக, தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது. இவ்வழக்கில் தமிழ்நாடு அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் ஆஜராகி வாதாடுகின்றனர்.**

அதன் விபரம் வருமாறு:–

மாநில அரசால் அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலதமாதப்படுத்தும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகளை சட்டவிரோதம் என அறிவிக்க உத்தரவிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் தரப்பில் அண்மையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக கடந்த 6ஆம் தேதி தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் அடங்கிய அமர்வின் முன், தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்களான அபிஷேக் மனு சிங்வி மற்றும் வில்சன் ஆகியோர் ஆஜராகி சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதன்படி, தமிழ்நாடு அரசின் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக் கோரிய ரிட் மனு, நவம்பர் 10ஆம் தேதி விசாரணைக்காக பட்டியலிடப்பட்டது.

அவ்வாறே, நவ. 10 அன்று – ஆளுநர் ரவிக்கு எதிராக தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

”மசோதாக்களை கிடப்பில் போட்டு அரசின் செயல்பாடுகளை ஆளுநர் முடக்கி வைக்கிறார். பணி நியமனம் தொடங்கி எந்த ஒரு கோப்புகளுக்கும் அனுமதி கொடுக்க ஆளுநர் மறுப்புத் தெரிவிக்கிறார்; கைதிகளை முன்கூட்டியே விடுதலை செய்யும் கோப்புகளைக் கூட கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார் என தமிழக அரசு மூத்த வழக்கறிஞர்கள் தனது வாதத்தை முன்வைத்தனர்.

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் ஏ.எம்.சிங்வி, பி.வில்சன் ஆகியோர், “ஊழல் வழக்கில் சிக்கியுள்ள அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை கோரும் கோப்பு, டி.என்.பி.எஸ்.சி. நியமனங்கள், சிறைவாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வதற்கான ஒப்புதல் கோரும் கோப்புகளைக் கூட ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்” என்று தெரிவித்தனர்.

“மக்களின் பொது சுகாதாரம் தொடங்கி உயர் கல்வி விவகாரம் வரை எந்தக் கோப்புகளுக்கும், மசோதாக்களுக்கும் ஆளுநர் பதில் அளிக்கவில்லை என்றனர்.

அப்போது உச்சநீதிமன்றம், “அரசியல் சாசன சட்டப்பிரிவு 200ன் படி மாநில சட்டப்பேரவைகளில் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதல் கோரி அனுப்பப்படும் கோப்புகள் மீது அவர் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் முடிவு எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியது. இதனை இன்னும் விவரித்து தலைமை நீதிபதி சந்திரசூட் கூறுகையில், ”ஆளுநர் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கலாம். ஒருவேளை அது நிதி மசோதாவாக இல்லாமல் இருந்தால் முடிவை நிறுத்தி வைக்கலாம் அல்லது அதில் திருத்தம் மேற்கொள்ளப் பரிந்துரைத்து அரசுக்குத் திருப்பி



அனுப்பலாம் அல்லது சட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கலாம். ஆனால், எதுவுமே செய்யாமல் காலவரையின்றி மசோதாக்களை கிடப்பில் போட முடியாது” என்றார்.

அப்போது வழக்கறிஞர் சிங்வி, ”அதையே நாங்களும் கூறி வருகிறோம். மசோதாக்கள் மீது முடிவெடுக்கும்படி நாங்கள் 2020 ஜனவரி தொடங்கி இப்போது வரை ஆளுநரிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறோம். தவறு செய்தோர் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாக சில கோப்புகளில் கையெழுத்திட வேண்டி வருகிறோம். சில கைதிகளை நன்னடத்தையின் அடிப்படையில் தண்டனைக் குறைப்புக்கு பரிந்துரைக்க வேண்டி வருகிறோம். ஆனால், அவர் எதையுமே செய்வதில்லை” என்றார்.

அவரைத் தொடர்ந்து வழக்கறிஞர் வில்சனும் வாதிட்டார். அப்போது அவர், ”ஆளுநர் செயல்படாமல் இருப்பதால் டி.என்.பி.எஸ்.சி.யில் 14 இடங்களில் தலைவர் உள்பட 10 பதவிகள் காலியாக உள்ளன. எத்தனையோ முறை கோரியும் ஆளுநர் அந்தக் கோப்பை இதுவரை கிடப்பில் போட்டிருக்கிறார் என்று கவலை தெரிவித்தார்.

அதையடுத்து, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

அந்த நோட்டீஸில், ‘மக்களின் உரிமைகளைச் சிதைக்கும் வகையில் ஆளுநர் செயல்படுகிறார்’ என்ற தமிழக அரசின் மனுவுக்கு பதிலளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இம்மாதம் 20ஆம் தேதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்போது மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் அல்லது அவருக்குப் பதிலாக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத் தில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும்” என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் – ஆளுநர் ஆர்.என்.ரவி அவசரமாக, நீண்ட காலமாக கிடப்பில் வைத்திருந்த, 10 மசோதாக்களையும் கடந்த 13ந்தேதி அரசுக்குத் திருப்பி அனுப்பியதும் –

இதையடுத்து தமிழ்நாடு சட்டப்பேரவை நேற்று முன்தினம் (சனிக்கிழமை) அவசரக் கூட்டமாக கூட்டப்பட்டு ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வேந்தர்களை அரசே நியமிக்கும் சட்ட மசோதாக்கள் உள்பட 10 மசோதாக்களையும் மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு நேற்று முன்தினம் மாலையே அனுப்பி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

---

### இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட

## நாகை - இராமநாதபுரம் மீனவர்கள் 22 பேர் விடுதலை!

### இலங்கை நீதிமன்றம் உத்தரவு!

கொழும்பு, நவ. 20 –

கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் கைது செய்வதும், படகுகள் உள்ளிட்ட உபகரணங்களை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது. இந்த விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க., அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் அலட்சியத்துடன் இருந்து வருகிறது.

இருப்பினும் தமிழ்நாடு அரசின் உரிய அழுத்தத்தின் பேரில், மீனவர்கள் படிப்படியாக மீட்கப்பட்டு வருகின்றனர். அந்தவகையில், அண்மையில் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட நாகை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 22 மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்பேரில், இந்த மீனவர்களை இலங்கை நீதிமன்றம் விடுதலை செய்தது.

---

## உதகை மலை ரயில் சேவை மீண்டும் தொடங்கியது!

உதகை, நவ. 20 –

மேட்டுப்பாளையத்தில் இருந்து நேற்று காலை உதகையை நோக்கி ரயில் புறப்பட்டது. மேட்டுப்பாளையம் – குன்னூர் இடையிலான மலை ரயில் போக்குவரத்து பத்து நாட்களுக்கு பிறகு மீண்டும் துவங்கியது. கடந்த பத்து நாட்களுக்கு மேலாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மலை ரயில் பாதை அமைந்துள்ள பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்தும், மண்சரிவு ஏற்பட்டும் சேதமடைந்திருந்தது.

இந்நிலையில், சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் சீரமைக்கும் பணிகள் முடிவுற்ற நிலையில் பத்து நாட்களுக்கு பிறகு நேற்று மேட்டுப்பாளையம் – குன்னூர் இடையிலான மலை ரயில் சேவை மீண்டும் துவங்கியது. பத்து நாட்கள் இடைவேளைக்கு பிறகு மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து முன்பதிவு செய்த 180க்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளுடன் மலை ரயில் புறப்பட்டு குன்னூர் சென்ற நிலையில் அதில் மிகுந்த உற்சாகத்துடன் பயணிகள் பயணித்துள்ளார்.

---

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும்

# 10 சட்ட மசோதாக்களுக்கும் - ஆளுநர் ஒப்புதல் அளிக்கவேண்டும்!

## சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு வலியுறுத்தல்!

**சென்னை, நவ. 20 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், விவாதங்களின் நடுவே குறுக்கிட்டு விளக்கமளித்த பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், “தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்படும் 10 சட்ட மசோதாக்களுக்கும் மறுப்பேதும் தெரிவிக்காமல் ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.**

*சட்டப்பேரவையில் - பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், இதுகுறித்து குறிப்பிட்டதாவது:-*

இந்த அவைக்கு நானும் சில விவரங்களைச் சொல்ல வேண்டும். நம்முடைய ஆளுநர் அவர்கள் அதை “I withheld assent” என்று போட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், திரும்ப இந்த சட்டமன்றத்தில் விவாதிப்பதற்கோ, மறு ஆய்வு செய்வதற்கோ உரிமை இருக்கிறதா என்கின்ற கோணத்தில்தான், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களின் கேள்வி நியாயமான கேள்விதான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், NEET தேர்வில் நம்முடைய நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுமாதிரி, நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இதேபோன்று “I with hold assent” என்று சொல்லி, திருப்பி அனுப்பியபோது, அப்போது நம்முடைய சட்டத் துறை அமைச்சராக இருந்த சி.வி.சண்முகம் அவர்கள், நாங்கள் அதற்கு மத்திய அரசிடம், என்ன காரணத்திற்கு withhold என்று நீங்கள் அனுப்பினீர்கள் என்ற விவரத்தைக் கேட்டிருக்கிறோம். அந்த விவரம் வந்திருந்தால் அந்த Billஐ மறு ஆய்வுக்கு நாங்கள் இந்த சட்டமன்றத்திற்கு கொண்டு வந்திருப்போம் என்று அவர்கள் சொன்னபோது, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய முதல்வர் அவர்கள், 2019 ஜுலை மாதம் 17 ஆம் தேதி, தெளிவாகச் சொன்னார்கள், withhold என்று சொன்னதை, Article 201 of the Indian Constitutionன்படி, மறு ஆய்வு செய்வதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு உரிமை இருக்கிறது.

சட்டமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டவர் முதலமைச்சராக இருக்கின்றார். அந்த அவைக்கு முழு இறையாண்மை இருக்கின்றது, மாண்பு இருக்கின்றது, மக்கள் பிரச்சி



னையை எத்தனை முறை வேண்டுமென்றாலும் கொண்டு வரலாம் என்பதற்கு முதலமைச்சர் அவர்களும் அப்போது தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். இந்த அவையின் அவைக்குறிப்பில் அது இருக்கிறது. இன்னும் அதற்குமேல் சொல்ல வேண்டுமென்றால், withhold என்று சொல்லி, அதை நிறுத்தி வைத்திருப்பதாக அவர் சொன்னால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வு செய்யுங்கள் என்றோ, மறு ஆய்வு செய்யக்கூடாது என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வுக்கு உட்பட்டது, மறு ஆய்வு செய்யக்கூடாது என்றும் சொல்லவில்லை. இந்த இடத்தில் இந்தப் பேரவைக்கு மிகப் பெரிய மாண்பு இருக்கின்றது. பேரவை விதி 286ன்படி இந்திய அரசியலமைப்பு சட்டத்திலோ அல்லது பேரவை விதிகளிலோ குறிப்பிட்டு சொல்லப்படாத பொருள் குறித்து சட்டமன்றத்தில் இவ்வாறு அரசு ஒரு தனித் தீர்மானம் கொண்டு வந்தால், அந்த இடத்தில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில்,

அதாவது, இந்தச் சட்டமன்றப் பேரவை எனக்குத் தந்திருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தச் சட்டப் பேரவையிலே மறு ஆய்வுக்கு சபாநாயகர் என்ற முறையில் நான் அனுமதி அளித்துத்தான் இதுவரை இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. மறு ஆய்வுக்கு உட்பட்டதுதான். அது திருப்பி அனுப்பப்பட்டது எந்தக் காரணமும் இல்லாமல். உள்நோக்கத்தோடு என்றுதான் அதில் பொருள்கொள்ள வேண்டும். காரணம், கல்வியில், உயர் கல்விக்கு என்று சொல்லி ஒரு சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அது எந்த இறையாண்மைக்கு எதிரானது? இது எந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது? இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் ஒன்றிய அரசிடமிருந்து தற்போது மானியமே வழங்கப்படுவதில்லை.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 3 ஆண்டுகளாக ஒரு பைசாகூட வழங்கப்படவில்லை. இது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, இந்த நிலையிலே முழுவதுமாக நம்முடைய அரசின் முதலமைச்சர் அவர்கள், நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் நம்முடைய வரி வருவாயின் மூலம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், 3 வருடங்களுக்குப் பிறகு மொத்தமாக அவர்கள் withhold என்று எழுதி அனுப்பியதில், உள்நோக்கம் இருப்பதாகத்தான் அனைவருமே வெளிப்படையாகச் சொல்கிறார்கள். நம்முடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் சரியான பதில் இல்லாத காரணத்தால் வெளிநடப்பு செய்திருக்கிறார். நான்கூட அவர்கள் வெளிநடப்பு செய்வதைப் பார்த்தால், தமிழ்நாட்டிலே யாருமே ஆளுநருடைய செய்கைக்கு சரி என்று சொல்லவில்லை. இவர்கள் சொல்லித்தான் அவர் செயல்படுகிறாரோ என்கின்ற ஓர் அர்த்தம் வந்துவிடும், இவர் வெளிநடப்பு செய்வதாலேயே அப்படி ஒரு நோக்கம் வந்துவிடும். ஆகவே, இவருக்கு தமிழ்நாட்டின்மீது அக்கறை இருக்கிறதா என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானம் மறு ஆய்வுக்கு உட்பட்டது.

10 சட்டமுன்வடிவுகளையும் ஒரு fullstop, comma இல்லாமல், NEET விலக்கு மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டதோ, online Rummy தடை மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டதோ, அதேபோன்று இந்த 10 மசோதாக்களும் மீண்டும் அனுப்பப்படும். அவற்றிற்கு ஆளுநர் ஒப்புதல் தர வேண்டும். இதுதான் சட்டம்.

பேரவைத் தலைவர் அவர்கள், குறிப்பிட்டார்.

---

### காங்கிரஸ் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளை காப்பியடிக்கிறது!

# பா.ஜ.க.வுக்கென தனித்த கொள்கை எதுவும் இல்லை!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகர்ஜுன கார்கே பிரச்சாரம்!

*ஜெய்ப்பூர், நவ. 20 -*

*ராஜஸ்தான் மாநிலத்தில் வரும் 25ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. பிரசார பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகர்ஜுன கார்கே, பா.ஜ.க.வுக்கு என எந்த கொள்கையும் இல்லை என்றும், தேர்தலுக்காக காங்கிரஸின் வாக்குறுதிகளை காப்பியடிக்கிறது என்று விமர்சித்துள்ளார்.*

*ராஜஸ்தான் மாநிலத்தில் முதலமைச்சர் அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருக்கிறது. இம்மாநிலத்தில் மொத்தம் 200 தொகுதிகள் இருக்கின்றன. இந்நிலையில் மாநிலத்திற்கு வரும் 25ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறுகிறது. இதில் எப்படியாவது ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள காங்கிரஸ் பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளது.*



*எனவே காங்கிரஸ் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறது. பரத்பூர் மாவட்டத்தின் வயர் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்று பேசிய அக்கட்சியின் தலைவர் மல்லிகர்ஜுன கார்கே, பா.ஜ.க.வுக்கு என எந்த கொள்கையும் இல்லை என்றும், தேர்தலுக்காக காங்கிரஸின் தேர்தல் வாக்குறுதிகளை பா.ஜ.க. காப்பியடிக்கிறது என்றும் விமர்சித்துள்ளார்.*



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 20-11-2023

# ஆளுநரின் தொங்கு சதை அ.தி.மு.க.

எந்தக் காரணமும் சொல்லாமல் இரண்டாண்டு காலம் தமிழ்நாட்டுச் சட்ட முன்வடிவுகளை கிண்டி மாளிகைக்குள் வைத்து பூட்டி வைத்திருந்த ஆளுநர் ஆர்.என்.ரவி. உச்சநீதிமன்றம் உச்சம் தலையில் கொட்டத் தொடங்கியதும் - எந்தக் காரணமும் இல்லாமல் திருப்பி அனுப்பி இருந்தார். அது கிடைத்த மூன்றாவது நாளே தமிழ்நாட்டு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி - அதே சட்ட முன்வடிவுகளை திருத்தம் ஏதும் செய்யாமல் நிறைவேற்றி அனுப்பிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

"கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை - இந்திய அரசியல் சட்டம் வழங்கும் அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்த சட்டமன்றத்தை - தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால் - இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்திவிடும் என்ற அச்சத்துடன்தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்" என்று தொடங்கிய முதலமைச்சர் அவர்கள், "நாம் எப்போதும் சட்டத்தின் வழி நடப்பவர்கள். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 200-ன்படி அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக்கேட்டுக் கொள்கிறேன்" என்று முடித்தார் முதலமைச்சர் அவர்கள்.

**வாக்கெடுப்பின் போது இருந்த அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு முதலமைச்சரின் தனித்தீர்மானமும், அமைச்சர்கள் முன்மொழிந்த சட்டமுன்வடிவுகளும் பேரவையில் அனைத்து உறுப்பினர்கள் ஆதரவுடன் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் நவம்பர் 18 - 2023 என்பது மிகமிக முக்கியமான நாளாகும். அரசியலமைப்புச் சட்டத்தைக் காக்கவும் - மக்களாட்சி மாண்பைக் காக்கவும் - மாநில சுயாட்சித் தத்துவத்தை மீட்டெடுக்கவும் - ஆளுநர்களின் வாலை நறுக்கவும் அந்த நாள் முக்கியமான நாளாக அமைந்துவிட்டது.**

வழக்கம்போல்பா.ஜ.க.-வெளிநடப்புசெய்தது. இதுஎதிர்பார்த்ததுதான். ஏனென்றால் ஆட்டுவிப்பவர்கள் அவர்களே. பா.ஜ.க. தலைமை சொல்லாமல் ஆளுநர் ஆர்.என்.ரவி இவ்வளவு ஆடமாட்டார்.

பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க.வும் வெளிநடப்பு செய்துவிட்டது. இதுவும் அச்சரியம் அளிக்கவில்லை. ஆட்டுவிப்பது பா.ஜ.க. என்றால், ஆட்டம் போடுவது ஆளுநர் மட்டுமல்ல, அ.தி.மு.க.வும்தான் என்பதை பழனிசாமி நிரூபித்துவிட்டார்.

**முதலமைச்சர் கொண்டு வந்த சிறப்பு தனித்தீர்மானத்தின் மீது அ.தி.மு.க. சார்பில் பேசியவர் பழனிசாமி. அப்போது ஆளுநரை விமர்சித்தே பேசவில்லை. தீர்மானம் கொண்டு வந்த தி.மு.க. அரசைக் கண்டித்துதான் பேசிக் கொண்டு இருந்தார். இதுவே அவரது உண்மையான உள்நோக்கம் என்ன என்பதைக் காட்டி விடும்.**

**"சென்னாரெட்டி காலத்தில் இருந்து ஆளுநர்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்" என்று பழனிசாமி பேசி இருந்தால் அவரை ஜெயலலிதா வழியில் நடப்பவராக ஏற்றுக் கொள்ளலாம். 'மாநில அரசுகளை ஆளுநர்கள் இப்படித்தான் மறைமுகமாக ஆட்சி செலுத்தப் பார்க்கிறார்கள்' என்று சொல்லி இருந்தால் அவரது கட்சிக்கு 'அண்ணா' என்ற பெயர் இருப்பதற்கு பொருத்தமாகப் பேசுகிறார் என்று மகிழ்ச்சி அடையலாம். இவை அனைத்தையும் விட்டுவிட்டு அதே கிண்டி மண்டப ஸ்கிரிப்டை எடுத்து வாசித்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. இதை விட மோசடித்தனமான நிலைப்பாடு இருக்க முடியாது.**

'நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் போது தனித்தீர்மானம் எதற்கு?' என்று சட்டமேதை பழனிசாமி கேட்கிறார். 'அவர் தான் மூச்சு விடுகிறாரே, பிறகு எதற்கு ஆபரேஷன்?' என்று கேட்பதைப் போல இருக்கிறது பழனிசாமியின் வாதம்.

'சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பாமல் வைத்திருக்கிறார்' என்று வழக்குப் போட்டதும், உடனே திருப்பி அனுப்புகிறார் ரவி. அதாவது திருப்பி அனுப்பிவிட்டு தப்பிக்கப் பார்க்கிறார் ரவி. இதனைத்தான் சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம், நாட்டுக்கு அம்பலப்படுத்தி இருக்கிறது. 'வழக்குப் போட்டதும் தான் திருப்பி அனுப்புவீர்களா?' என்று ஆளுநரைக் கேட்பதற்கு பழனிசாமிக்கு துப்பு இல்லை. தீர்மானம் போட்டவர்களைப் பார்த்து பிராண்டுகிறார்.

வெளிநடப்புச் செய்வதற்கு பழனிசாமி கண்டுபிடித்த காரணம் தான் அதை விட மோசடியானது. பல்கலைக் கழகத்துக்கு ஜெயலலிதா பெயரை வைத்தோம், அதை நீக்கிவிட்டது தி.மு.க. அரசு என்கிறார் அவர். சட்டமன்றத்தில் பேசும் போதாவது தெரிந்து கொண்டு வர வேண்டாமா? 'திராவிடம் என்றால் என்ன?' என்று தெருவில் நிறுத்திக் கேட்டார்கள். 'நான் புராணங்களை படித்தது இல்லை' என்றார். அது தெரு. எதுவேண்டுமானாலும் சொல்லலாம். பேரவையில் பேசும் போது அறிந்து வர வேண்டாமா?

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள். "I withhold assent" அதாவது, - தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, கடந்த 13.11.2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். இதில் இரண்டு சட்டமுன்வடிவுகள் அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டவை ஆகும்.

★. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு (ச.மு.எண்.02/2020) -

★ 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவஅறிவியல் பல்கலைக் கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (ச.மு.எண்.12/2020) இவை இரண்டும் அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டு ஆளுநர் மாளிகை ஒப்புதல் வழங்காதவை ஆகும்.

10 சட்டமுன்வடிவுகளில், 2 சட்ட முன்வடிவுகள் 2020ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளுக்கும் மேலாக ஆளுநர் அவர்கள் தன்வசம் வைத்துக் கொண்டுவிட்டு, தற்போது ஒப்புதல் எதுவும் அளிக்காமல் திருப்பி அனுப்பியுள்ளார். இதுவே பழனிசாமிக்குத் தெரியவில்லை. ஆளுநருக்கு எதிராகப் பேசினால், பா.ஜ.க. கோபித்துக் கொள்ளும் என்று பாதம் தாங்கி பழனிசாமி பயந்துவிட்டார். அதனால்தான் தீர்மானம் கொண்டு வந்த தி.மு.க.வையே விமர்சித்துப் பேசிக் கொண்டு இருந்தார்.

மீன்வளப் பல்கலைக் கழகத்துக்கு ஜெயலலிதா பெயர் வைக்கவும் ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆளுநர் திருப்பி அனுப்பிய பத்து சட்டமுன்வடிவுகளில் அதுவும் ஒன்று. அதுவே பழனிசாமிக்குத் தெரியவில்லை. பழனிசாமி கண்ணை பா.ஜ.க. பயம் மறைப்பதால் தெரியவில்லை.

**ஆளுநருக்கு பழனிசாமி சேவகம் செய்வதற்கு மிக முக்கியமான காரணம், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளுக்கு அனுமதி தராமல் வைத்திருக்கிறார் 'மகா யோக்கியர்' ஆர்.என். ரவி. அதனால்தான் ஆளுநரின் பாதத்தையும் சேர்த்துத் தாங்குகிறார் பழனிசாமி.**

●●

## தமிழ்நாட்டில்

# உயர் கல்வி மாபெரும் வளர்ச்சி பெற்றது - கலைஞர் ஆட்சியில்தான்!

## சட்டப் பேரவையில் - உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆணித்தரமான விளக்கம்!



சென்னை, நவ. 20-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தின் போது குறுக்கிட்டு விளக்கமளித்த உயர்கல்வித்துறை அமைச்சர்முனைவர்க.பொன்முடி, "தமிழ்நாட்டில் உயர்கல்வி மாபெரும் வளர்ச்சி பெற்றது. தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான்"என்றுஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

சட்டப் பேரவையில் - அமைச்சர் முனைவர் க.பொன்முடி குறிப்பிட்டதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவெனில், நீங்கள்ஆட்சியிலே இருந்தபோது சூரப்பா அவர்களை கொண்டுவருவதைஎதிர்த்து சொன்னீர்கள். அப்போது நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும்நாங்களும்உங்களுடைய கோரிக்கையை ஏற்றுஆதரவளித்து,சூரப்பாவின்மீது வழக்கு போடுவதற்குநாங்களும்உறுதுணையாக இருந்தோம் என்பதையும்நீங்கள்மறந்துவிடக்கூடாது.அந்தசூரப்பாவினுடையவழக்குநீங்கள்போட்டதைப் போலவே இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.ஆகவே, எந்த நல்ல நிகழ்வுகளாக யிருந்தாலும், காலத்திற்கேற்ப—அப்போதிருந்தஆளுநர்கள் எப்படி செயல்பட்டார்கள்; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள் எப்படி செயல்படுகிறார் என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள் மிக அதிகமாக பல்கலைக்கழகங்களினுடைய விவகாரங்களிலே தலையிட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலேதான், தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும்என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குசுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்சிவேறுபாடுகள் இல்லாமல் இதை அனைவரும் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால், அரசமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டி ருக்கிறது; தமிழ்நாடுஅரசுக்குஇந்தஉரிமைகளெல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 246ன்கீழ், ஏழாவது அட்டவணை, பட்டியல்IIமாநிலப் பட்டியல், வரிசை 32ன்படி, மாநில அரசு பல்கலைக்கழகத்தை நிறுவுதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் களைத்தல் ஆகியவை மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. அதைத்தான் நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத்தீர்மானத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் இன்றையஆளுநர்அவர்களுடைய செயல்பாடுகளையெல்லாம் இங்கே நண்பர்களெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். திரு. சங்கரய்யா அவர்களுக்குமுனைவர்பட்டம் கொடுக்க வேண்டும் என்று செனட் நிறைவேற்றி அனுப்பிய பிறகும், ஆளுநர் அவர்கள் மறுத்ததிலிருந்து உங்களுக்கு அவர் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். பல்கலைக்கழகங்களில் அரசியல் செய்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது; அதுபோன்று இருக்கக் கூடாது என்ற காரணத்தினால்தான் இந்தத்தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. நம்மை அரசியல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்; அதெல்லாம் கிடையாது. அவை முன்னவர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல, அப்போதிருந்துசென்னைப்பல்கலைக் கழகத்தில் 3 பேர் இருக்கிற குழுதான்துணைவேந்தரை தேர்ந்தெடுத்து அவர்களுக்குஅனுப்பும். அதில்ஒருவரைத்தான்நியமிப்பார்கள் என்பதெல்லாம் இருந்தது. நீங்கள்சொன்னீர்கள், இந்த ஆளுநர் அவர்கள், அந்த 3 பேர், அவர்கள் நியமிப்பது மட்டுமல்லாமல், UGC லிருந்து வருகிற ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதையெல்லாம்தான் நாம் எதிர்க்கிறோம். UGCஎன்பது ஒரு advisory body; அவ்வளவுதானே தவிர, அவர்கள் சொல்பவர்களை நியமிக்க வேண்டும் என்பது அல்ல; பல்கலைக்கழகங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் தமிழக முதலமைச்சர்அவர்கள்இதைவலியுறுத்திசொல்லியிருக்கிறார்கள். நீங்கள் இருந்தபோதிலும் சரி, இப்போதும் சரி, உண்மையிலேயே இது தமிழகத்தினுடைய உயர் கல்வித் துறையின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

உயர்கல்வி என்று சொன்னால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கலைஞர் ஆட்சியில்தான் அதிகமான வளர்ந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் இங்கே சட்டப் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது. விவசாயப்பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது. ஆகவே, பல்வேறு பல்கலைக்கழகங்களை உருவாக்கியவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மாவட்டத்திற்குஒருமருத்துவக்கல்லூரி கொடுக்க வேண்டுமென்று சொன்னவரே தலைவர் கலைஞர்தான். அந்த அடிப்படையில்அவர்இருக்கின்ற போதே பல்வேறு மாவட்டங்களுக்கு மருத்துவக் கல்லூரி வழங்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் இன்றைக்கு மத்திய அரசுகூட இங்கேகொண்டுவரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கலைஞருடையஆட்சியில்உயர்கல்வி என்பது வளர்ந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடையகாலத்தில்ஆரம்பக் கல்வி வளர்ந்தது; தலைவர் கலைஞருடைய காலத்தில் உயர் கல்வி வளர்ந்தது. அதனால்தான்தமிழகமுதல்வர் அவர்கள் என்னுடைய இரண்டு கண்களிலே ஒன்று கல்வி என்று சொல்லி, இன்றும் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டு கொண்டிருக்கிறார்என்பதுதான்உண்மை. அவர்களும் செய்தார்கள்; நான்இல்லையென்றுசொல்லவில்லை. அதே நேரத்தில் கலைஞர் அவர்கள் செய்ததையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்இதனைநான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகத்தைப்பற்றி சொன்னார். அதற்கு ஏதாவது இங்கே நிதியை ஒதுக்கியிருந்தார்களா என்பதை மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களை சொல்ல சொல்லுங்கள். (குறுக்கீடு) நிதியும் ஒதுக்கப்படவில்லை;இடமும்தேர்ந்தெடுக்கப்படவில்லை. பெயர் வைப்பதற்காக மட்டுமே ஒன்றை அறிவித்துவிட்டுசென்றார்களேதவிர, உண்மையிலேயேஅவர்கள் பல்கலைக்கழகத்தை உருவாக்க வில்லை. அந்த அடிப்படையில்தான் அவர்கள் காலத்தில்அரசுடைமையாக்கப்பட்டஅண்ணாமலைபல்கலைக்கழகத்தோடு அவை இணைக்கப்பட்டு, இன்றும் அவை சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். ) (ஓ. பன்னீர்செல்வம், பால் மனோஜ் பாண்டியன், ஆர். வைத்திலிங்கம், கோ. ஐயப்பன் தவிர)

தலைவர் கலைஞர் பெயரையேமாற்றிவைத்தார்கள் அவர்கள். கலைஞர்கல்லூரி என்றுதிருவாரூர்மாவட்டத்தில் இருந்த கல்லூரியின் பெயரையேமாற்றியவர்கள் இவர்கள். இவர்கள் இப்படிப் பேசுவதற்கு எந்தவித மானதகுதியும்இல்லை.திருவாரூரில் கலைஞர் கொண்டுவந்த கல்லூரிக்கு, கலைஞர் அரசு கலைக் கல்லூரி என்று இருந்ததை மாற்றியவர்கள் அவர்கள் என விளக்கம் அளித்தார்.

# பெரம்பலூரில் 'நீட் விலக்கு - நம் இலக்கு' கையெழுத்து இயக்கம்!

பெரம்பலூர், நவ.20-

பெரம்பலூர் மாவட்டம்,பாடாலூரில்ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

நீட் விலக்கு, நம் இலக்கு' என்ற தலைப்பில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள்பெறதமிழ்நாடுமுழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பெரம்பலூர்மாவட்டம், ஆலத்தூர் தாலுக்கா, பாடாலூரில் ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தகவல்தொழில்நுட்பஅணி சார்பில் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம், பெரம்பலூர் மாவட்ட கழகச்செயலாளர்குன்னம். சி.இராஜேந்திரன்தலைமையில் நடைபெற்றது.

மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் வல்லபன், மாவட்ட தகவல் தொழில்நுட்பஅணிஅமைப்பாளர் ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்புவிருந்தினராகதகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலதுணைச்செயலாளர் கேசவன் கலந்து கொண்டு நீட் விலக்கு, நம் இலக்கு என்ற கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். இதில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர்ஆர்வத்துடன் பங்கேற்று ஏழை, எளிய அரசுபள்ளிமாணவர்களின் மருத்துவ கனவை சிதைக்கும், நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும்மசோதாவிற்குஇந்தியஜனாதிபதிவிரைந்துஒப்புதல்வழங்கவேண்டும்என வலியுறுத்தி கையெழுத்திட்டனர். கையெழுத்திடப்பட்ட அனைத்து கடிதங்களும் தி.மு.க. தலைமைக்கு அனுப்பப்பட்டு, பின்னர் இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். முன்னதாக, ஆலத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான சோமு.மதியழகன் மறைவிற்கு இரங்கல் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணி மாவட்டஅமைப்பாளர்கள் சுதா, விஜய், கிளை கழக செயலாளர்கள் துரைசாமி, செந்தில்குமார், மாவட்ட, ஒன்றியநிர்வாகிகள், இளைஞரணி, மகளிர் அணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்திரளாககலந்து கொண்டனர். முன்னதாக, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருண் அனைவரையும் வரவேற்றார். முடிவில் ஒன்றிய தகவல்தொழில்நுட்பஅணி ஒருங்கிணைப்பாளர் ஆனந்த் நன்றி கூறினார்.



# சட்டமன்ற சிறப்புக் கூட்டம் : ஒரே கல்லில் பல மாங்காய்!

**ஒரு நாள் சிறப்பு சட்டமன்றக் கூட்டம்!**

**ஒரே கல்லில் பல மாங்காய்... என்பார்களே, அதனை அடித்துக் காட்டியுள்ளார் முதல்வர் தளபதி ஸ்டாலின்!**

**இந்தக் கூட்டத்தின் மூலம் ஆளுநரின் அகம்பாவம் தோலுரிக்கப்பட்டுள்ளது! பி.ஜே.பி.யின் சுயரூபம் வெளிக் கொணரப்பட்டது!**

**அ.தி.மு.க.வின், பி.ஜே.பி. எதிர்ப்பு நாடக முகமூடி கிழிக்கப்பட்டுள்ளது !**

**தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வகுத்த வியூகத்திலிருந்து வெளிவர முடியாமல், இவர்கள் எல்லோரும் விழிபிதுங்கி நிற்கும் காட்சி வரலாறாகிறது!**

உச்சநீதிமன்றத்தின் கண்டனம் தன்மீது பாயுமோ என்ற அச்சத்தில் அதைத் தவிர்க்க தான் சாதுர்யமாக செயல்படுவதாகக் கருதி, சில ஆண்டுகளாக; கிடப்பில் கிடந்த மசோதாக்களைத் திருப்பி அனுப்பினார் ஆளுநர் ரவி!

பாவம்; அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார் ; இந்த எதிர் விளைவை! **“நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று, அதனாலே முழிக்குதே அம்மா கண்ணு!”** என்ற பாடல் வரிகளை மாற்றி, **“நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று, அதனாலே முழிக்குதே ஆளுநர் கண்ணு!”** என்று பாடிடும் வகையில் எல்லாமே நடந்துவிட்டது!

நாளை உச்சநீதிமன்றத்துக்குச் சென்று தன்னிடம் தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானங்கள் எதுவும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கும் நோக்கோடு ஆளுநர் ரவி திருப்பி அனுப்பினார். அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார்; இப்படி தமிழ்நாடு அரசு உடனடியாக சட்டப் பேரவைக் கூட்டத்தைக் கூட்டி, அவரால் திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்களை மீண்டும் ஆளுநருக்கே திருப்பி அனுப்பிடும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பி வைக்கும் என்பதை!

ஆளுநர் ரவியின் சித்து விளையாட்டுகளெல்லாம் தமிழ்நாட்டு அரசியல் அரங்கில் செல்லுபடியாகாது என்பதை; பல படிப்பினைகளைப் பெற்றும் ஏனோ அவர் உணரவில்லை!

தமிழ்நாடு அரசு தயாரித்துத் தந்த ஆளுநர் உரையில் தமிழினத் தலைவர்களின் பெயர்களையும், சில சொற்களையும் அவரே விடுத்து உரையாற்றிவிட்டு, தான் பெரிய சாதனையைப் புரிந்து விட்ட தாகவும், ஆளும் கட்சி என்ன செய்துவிட முடியும் என்றும் இறுமாப்பில் இருந்தபோது, தமிழ்நாட்டு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவையில் எழுந்து, **“ஆளுநர் உரையில் அரசு தயாரித்துத் தந்த உரைதான் அவைக் குறிப்பில் இடம் பெறும்”** எனத்தீர்மானம்நிறைவேற்றியதும், அவையிலிருந்து தேசியகீதம் ஒலிப்பதற்கு முன்பே ஆளுநர் ஓட்டமும் நடையுமாக வெளியேறியபோதே பாடம் பெற்றிருப்பார் என்று கருதினோம்!

சனாதன தர்மத்துக்கு சப்பைக் கட்டு கட்டிடும் ஆளுநர், பிறப்பால் தான் தலையில் பிறந்த சாதியைச் சேர்ந்தவர், தன்னை வெற்றி காண இயலாது என்ற இறுமாப்பில் சுழன்றபோது; தமிழ்நாட்டு முதலமைச்சர் அவரது தலையிலே இறக்கிய முதல் இடியிலேயே அவர் தெளிவு பெற்றிருப்பார் - பெற்றிடுவார் என



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.11.2023 அன்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பெற்ற சட்டமுன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

எண்ணினோம்! முதல் சூட்டிலே அவர் திருந்தியதாகத் தெரியவில்லை!

அமைச்சர் செந்தில் பாலாஜியின் மீது வழக்கு இருப்பதால் அவரை அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் எனத் தான்தோன்றித்தனமாக, ஒரு ஆளுநரின் அதிகார வரம்பு அறியாது தெரிவித்துவிட்டு, முதல் அமைச்சரின் விளக்கப் பதிலுக்குப் பிறகு நத்தை தனது கூட்டுக்குள் பதுங்குவதுபோல பதுங்கிக் கொண்டார்!

“எல்லோருக்கும் எல்லாம்” எனும் ‘திராவிட மாடல்’ ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் முதல்வரை முடக்குவதாக எண்ணி, ‘இங்கு உண்மையில் ஆரியம் -



திராவிடம் கிடையாது’ - என்று பேசிவிட்டு, எதிர்ப்பு வலுவானதும்; நண்டு ஓடிப் பொந்துக்குள் புகுந்துகொள்வது போல ராஜ்பவனத்துக்குள் முடங்கிப் போனார்!

‘தமிழ்நாடு’ என்பதை ‘தமிழகம்’ எனக் குறிப்பிட்டால் போதும் என்று பேசியதோடு மட்டுமின்றி, தனது ஆளுநர் அலுவலகத்தில் அதற்கான மாற்றங்களைச் செய்து, விழா அழைப்பில், “தமிழ்நாடு அரசு” என்ற பெயரை தன்னிச்சையாக தமிழகமாக மாற்றி, சிறுபிள்ளைத்தன விளையாட்டு என்பார்களே; அந்த முறையில் செயல்பட்டார்! ஒட்டுமொத்தத் தமிழ்மக்களின் உணர்வுக்கு எதிராக அவர் செயல்பட்டதால், தமிழ்நாட்டின் பல திக்குகளிலிருந்தும் எழுந்த எதிர்ப்பில், சுழல் காற்றில் சிக்கிய சருகாய் அல்லாடிப் போனார்!

**இத்தனைக்குப் பிறகும் அவர் தன்னையும், தனது போக்கையும் திருத்திக் கொண்டதாகத் தெரியவில்லை! தன்னை மேதையாகத் தனக்குத் தானே எண்ணிக் கொண்டு, ஆணவத்தின் உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்து கொண்டு அடி மரத்தை வெட்டிடும் செயலில் இறங்கி அவ்வப்போது தலைகுப்புற கீழே விழுந்தாலும், மீண்டும் எழுந்து மரத்தில் ஏறிக் கொண்டு அதே செயலில் ஈடுபடும் பைத்தியக் காரச் செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்!**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனநாயக அரசுக்கு எதிராக நியமனப் பதவியில் இருந்துகொண்டு, சர்வாதிகாரப் போக்கோடு, இணையான அரசாங்கம் (Parallel Govt.) நடத்தத் தொடங்கினார்!

சட்டமன்றத்தில் அரசியல் கட்சிகள் அனைத்தும் (பா.ஜ.க. தவிர) எடுத்த முடிவினை ஒட்டி நிறைவேற்றப்பட்ட மசோதாக்களைக் கிடப்பிலே போட்டது மட்டுமின்றி, ‘பல நாட்கள் கிடப்பில் போட்டால் அந்த மசோதாக்களை ஏற்க இயலாது என்றுதான் அர்த்தம்’ என்று இறுமாப்பு விளக்கங்களைத் தந்தார்!

**“காலவரையின்றி மசோதாக்களைக் கிடப்பில் போடுவது மிகவும் கவலைக்குரியது”** என்று உச்சநீதிமன்றம், ஆளுநரின் செயல்பாடுகளுக்கு எதிராக தமிழ் நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் கருத்துத் தெரிவித்ததை ஒட்டி, ஆண்டுக்கணக்கில் நிலுவையில் வைத்திருந்த; அரசு நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களில், 10 மசோதாக்களை திருப்பி அனுப்பியுள்ளார்!

தமிழ்நாடு அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினை சாதுர்யமாக எதிர்கொள்வதாக அவர் நினைத்து அனுப்பினார்; தான் பெரிய வியூகம் அமைத்து தன் செயலைத் தற்காத்துக் கொண்டதாக நினைத்தார் ஆளுநர்; அந்த வியூகத்தை, சிறப்பு சட்டமன்றக் கூட்டம் நடத்தி தீர்மானம் நிறைவேற்றி, திருப்பி அனுப்பப்பட்ட மசோதாக்களை ஆளுநருக்கு மீண்டும் உடனடியாக அனுப்பிவிட்டார் முதலமைச்சர்! இந்த சிறப்புக் கூட்டம் ஆளுநரை மட்டுமின்றி பா.ஜ.க., அ.தி.மு.க.வின் முகமூடிகளையும் கிழித்தெறிவதாக அமைந்து விட்டது!




எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசுகையில், ஒரு அரிய கண்டுபிடிப்பை வெளியிட்டார். அதாவது, “ஆளுநர் மசோதாக்களை நிறுத்தித்தான் வைத்துள்ளார்; ரத்து செய்ததாகக் குறிப்பிடவில்லை” என ‘With Hold’ என்ற வார்த்தையைக் குறிப்பிட்டு தனது ஆங்கிலப் புலமையைக் காட்டிக் கொண்டார்! “ஆளுநர் ‘With Hold’ என்று குறிப்பிட்டுள்ளதால், இந்த 10 சட்ட முன் வடிவுகளை நிராகரிக்கவில்லை” என்று குறிப்பிட்டார்!

**ஆளுநர் ‘With Hold’ - என்று குறிப்பிட்டு அந்த சட்ட முன் வடிவுகளைத் திருப்பி அனுப்பாமல், ஒரு கடிதம்மூலம் தெரிவித்திருந்தால் கூட எடப்பாடி பழனிச்சாமியின் வாதம் ஏற்கக் கூடியதாக இருக்கலாம்; சட்ட முன் வடிவு களைத் திருப்பி அனுப்பி விட்ட பிறகு எப்படி அந்த வாதம் பொருந்தும்? சராசரி அறிவு படைத்தவர்களுக்குப் புரியக் கூடிய விவகாரம், நான்கு ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச் சாமிக்குப் புரியாமல் போனது விந்தை யல்லவா?**

பொதுவாக ஆளுநர், குடியரசுத் தலைவர் போன்றோர் மசோதாவைத் திருப்பி அனுப்பும் போது ‘With Hold’ என்று குறிப்பிடுவது, நிராகரிப்பதாகவே அர்த்தம் - என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி சட்டமன்றத்தில் பேசிய நிதியமைச்சரும் சட்ட அமைச்சரும் விளக்கமளித்தனர். இந்த விளக்கங்களை தனது கவனத்தில் கொள்ளாது, இல்லாத ஒரு குற்றச்சாட்டைக் கூறிவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் தனது கட்சியினருடன் வெளிநடப்புச் செய்தார்! ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்களில் ஒன்று, முன்னாள் முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதாவின் பெயரை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்துக்கு வைக்க வேண்டும் என்றிருந்ததைக் கூட அறியாமல், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியது போல; ஒரு நொண்டிச் சாக்கைக் கூறி வெளிநடப்புச் செய்தது அ.தி.மு.க.!



அ.தி.மு.க. வெளிநடப்பு செய்த காரணத்தை மிகவும் அழகாகச் சுட்டிக் காட்டிய அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன், ‘பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது’ என்றார்!

“பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணி முறிவு என்பதெல்லாம் வெளிநாடகம்; பி.ஜே.பி.யிலிருந்து தாங்கள் வெளியே வந்துவிட்டதாகக் கூறினாலும் அவர்களுக்கு இடையே உள்ளூர ஒரு நீரோட்டம் உள்ளது என்பதால், ஆளுநருக்கு எதிராகப் பேசினால் அது மோடியைத் தாக்குவதாக அமைந்துவிடும் என்று பயந்து வெளிநடப்புச் செய்துவிட்டனர்” என்று குறிப்பிட்டு அ.தி.மு.க.வின் சுயரூபத்தைச் சுட்டிக் காட்டினார்!

**தமிழ்நாடு சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டம் ஒரு நாள் நடத்தி, ஒரே கூட்டத்தில் பலரது சுயரூபங்களை தோலுரித்துக் காட்டிவிட்டார் முதலமைச்சர்!**

**இப்போது ஆளுநருக்கு ‘தி.மு.கழகம்’ என்பது என்ன என்று தெளிவாகப் புரிந்திருக்கும் என்று எண்ணுகிறோம்!**

**ஆணவம், அகம்பாவம் இவற்றைச் சுருட்டி வைத்துவிட்டு, தனது அதிகார வரம்புக்கு உட்பட்டுச் செயல்படுவது ஆளுநருக்கு நல்லது!.**



பெரம்பலூர் மாவட்டத்தில் 2024ம் ஆண்டிற்கான உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற மாவட்ட அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், சிறு, குறு தொழில் முனைவோர் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களுடனான சிறப்பு நோக்குக் கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் ரூ.54.58 கோடி மதிப்பில் பல்வேறு தொழில்கள் தொடங்க உள்ள 11 நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு பறிமாற்றிக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம்.சி.இராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் திருவெறும்பூர் வடக்கு தெற்கு ஒன்றியம் துவாக்குடி நகரம் மற்றும் கூத்தப்பார் பேரூர் கழகத்தை சேர்ந்த பாக முகவர்கள் மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் திருவெறும்பூர் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.எம்.கருணாநிதி, கங்காதரன், நகரக் கழகச் செயலாளர் காயாம்பு, பேரூர் கழகச் செயலாளர் தங்கவேல், பாக முகவர்கள் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### விவசாயிகள் பயன்பெறும் வகையில்

# தமிழ்நாட்டிலேயே பெரம்பலூர் மாவட்டத்தில்தான் அதிக விழுக்காடு பயிர்க்கடன்!

## கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெருமிதம்!

பெரம்பலூர், நவ. 20 -

பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவுத் துறையின் சார்பில் கர்ணம் சுப்ரமணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில் நடைபெற்ற 70வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 68 பயனாளிகளுக்கு ரூ.4.30 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடன் உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் தலைமையில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்வில் அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து மக்களுக்கான பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசு நகர பேருந்துகளில் கட்டணம் இல்லாபயணதிட்டத்தினை அறிவித்து இதுவரை இத்திட்டத்தின் கீழ் 375 கோடி பயணங்கள் பெண்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு சராசரியாக 40 லட்சம் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயணம் செய்து தங்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி வருகிறார்கள்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுப்படாத ஒப்பற்ற திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். கிராமப்புறங்களில் வசித்து வரும் விவசாய பெருமக்கள் காலையிலேயே வேலைக்கு சென்று விடுவதால் அவர்களது குழந்தைகள் காலை உணவை சரிவர சாப்பிட முடியவில்லை என்பதை அறிந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், காலை உணவு திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் மாணவர்கள் சத்து மிக்க காலை உணவை சாப்பிட்டு கல்வியை பெறுகிறார்கள். இந்தத் திட்டத்திற்காக வழங்கப்படும் பொருட்கள் கூட்டுறவுத் துறை மூலம் விநியோகிக்கப்படுவதால் இத்திட்டம் கூட்டுறவுத் துறைக்கும் பயனுள்ளதாக இருக்கிறது.



தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பெரம்பலூர் மாவட்டத்தில் வட்டியில்லாப் பயிர்க்கடன் நவம்பர் 15 ஆம் தேதி முடிய ரூ.245.08 கோடி 29,524 விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக நடப்பாண்டில் அக்டோபர் 2023 முடிய 41,405 விவசாயி களுக்கு ரூ.30.22 கோடி மதிப்புள்ள 12975.366 டன் உர விற்பனை செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள், பொது மக்கள் பயன்பெறும் வகையில் பயிர் கடன், டாம்கோ, டாப்செட்கோ கடன் உள்ளிட்ட பல்வேறு கடன்கள் வழங்கியதில் பெரம்பலூர் மாவட்டம் தமிழகத்திலேயே முதலிடத்தில் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக சுய உதவிக்குழுக்களின் 25,971 உறுப்பினர்களின் ரூ.52.72 கோடி அளவிலான சுய உதவிக்குழுக்கடன் தள்ளுபடி செய்யப்பட உள்ளது.

விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன் மூலம் பொருளாதாரத்தில் வலுவடைந்து கடனைச் செலுத்த ஏதுவாக மத்திய காலக் கடன்கள் 552 நபர்களுக்கு ரூ.4.24 கோடி வழங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் நகைக்கடன் நவம்பர் 15 ஆம் தேதி முடிய 18,884 நபர்களுக்கு ரூ.117.74 கோடி வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நடப்பாண்டில் நவம்பர் 15 ஆம் தேதி முடிய 690 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 8725 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.67.12 கோடி கடனாக வழங்கப்பட்டு, குழு உறுப்பினர்களுக்கு குடும்பங்கள் முன்னேற்றம் அடைந்து குடும்பப் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று வருகின்றன.

பிற்படுத்தப்பட்டோரை மேம்படுத்தும் வண்ணம் டாப்செட்கோ திட்டத்தின் கீழ் 633 நபர்களுக்கு ரூ.369.50 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. சிறுபான்மையினரை மேம்படுத்தும் பொருட்டு டாம்கோ திட்டத்தின் கீழ் 47 நபர்களுக்கு ரூ.29.50 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் கூட்டுறவுத் துறையின் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுக்கடன், கறவை மாடு கடன் என பல்வேறு திட்டங்களின் மூலம் 68 பயனாளிகளுக்கு ரூ.4.30 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடன் உதவிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட அளவில் சிறந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், அனைத்து வகை கடன்களையும் தவணை தவறாமல் 100% முழுமையாக வசூல் செய்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், அதிக அளவில் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், அதிக அளவில் பயிர்கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம், அதிக அளவில் கால்நடை பராமரிப்பு கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் போன்ற சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு பள்ளி மாணவ,மாணவிகளுக்கிடையே நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நினைவுப் பரிசுகளை வழங்கி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், பெரம்பலூர் ஒன்றியக்குழு தலைவர் திருமதி மீனா அண்ணாதுரை, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைபதிவாளர் க.பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் துணைத்தலைவர் ம.முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இளைஞர் அணி 2வது மாநில மாநாடு:

# புதுக்கோட்டைக்கு வருகை தந்த இரு சக்கர வாகன பிரச்சாரப் பேரணி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்றனர்

புதுக்கோட்டை, நவ. 20-

மாநில உரிமை மீட்புக்கான கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, இந்த முக்கியத்துவமிக்க மாநாட்டின் முழக்கத்தை, தமிழ்நாட்டின் பட்டி தொட்டியெங்கும் சேர்க்கின்ற விதமாக, 188 இரு சக்கர வாகனங்களைக் கொண்ட வாகனப் பேரணியை கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை எதிரே கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழக . விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி .வைத்த இரு சக்கர வாகனப் பேரணி, கழக வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தை வந்தடைந்தது. இந்தப் பயணத்தை மேற்கொள்ளும் கழக இளைஞர் படைக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், இளைஞரணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, விளாப்பட்டி சிவா, கந்தர்வக்கோட்டை ஸ்டாலின், அன்சாரி ஆகியோர் முன்னிலையில்,கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, கீரை. தமிழ்ராஜா, என்.சாத்தையா, ஆர்.செல்லத்துரை, ஆர்.ஆர்.சாமிநாதன், எம்.எம்.பாலு, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, கவிவேந்தன், வே.ராஜேஸ், வி.என்.எம்.பாலமுருகன், கை.பழனிச்சாமி, .தெய்வானை, ரெத்தினசபாபதி, ராஜேந்திரன், ராஜதுரை, பிரபு, காதர் கனி, ஜாகீர் உசேன், பால்ராஜ், செ.கணேஷ், சுதாகர், ஞானவேல், மகேந்திரன், ஹரிகரன், ஜெரால்டு நிக்கேஸ், ஐயப்பன், தங்கவேல், கரிகாலன், கற்பூரச்சோழன், முருகேசன். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் வரவேற்று வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# நாகர்கோவில் ஆவின் பால் பண்ணையில் கொள்முதலை அதிகரிக்க நடவடிக்கை!

குமரி, நவ.20-

நாகர்கோவில் கே.பி. ரோட்டில் அமைந்துள்ள ஆவின் பால் பண்ணையில் பால் உற்பத்தி மற்றும் மேம்பாட்டு துறை இயக்குநர் வினித் திடீர் ஆய்வு மேற்கொண்டார். தினமும் பால் கொள்முதல், பால் பாக்கெட் விற்பனை சரிவர நடைபெறுகிறதா என்றும், பால் உப பொருட்கள், பால் கோவா, தயிர், மோர், குல்பி, சாக்லேட் போன்றவை உரிய முறையில் தயாரிக்கப் படுகிறதா என ஒவ்வொரு பிரிவாக ஆய்வு மேற் கொண்டார்கள். பால் கொள்முதல் அதிகரிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

உடனடியாக பால் உற்பத்தி அதிகரிக்க கறவை மாடு கடன் பெற்றவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட இலக்கினை அடைய வேண்டும் என்று எடுத்துரைத்தார். பால் பண்ணையில் உள்கட்டமைப்புகளில் சில மாற்றங்கள் செய்திடவும் ஒவ்வொரு பிரிவிலும் பணிகள் ஒரே சீரான முறையில் உரிய பால் பண்ணையின் அமைப்பின்படி செயல்படுத்த அறிவுறுத்தினார்

பால் உற்பத்தி அதிகரிக்கவும், பால் கொள்முதல் செய்வதே உறுதிப்படுத்தி செயல்படுத்திடவும், பொது மக்களுக்கு பால் பாக்கெட் மற்றும் பால் உபப்பொருட்கள் தங்கு தடையின்றி அனைத்து பகுதியிலும் கிடைத்திட அறிவுறுத்தினார்.

பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடு கடன் பால் உற்பத்தி நிலையங்களை தரமான பால் சங்கத்திற்கு கடன்கள் வழங்க இயக்குநர் அறிவுறுத்தினார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாங்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.3.81 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள 18 வகுப்பறை கட்டடப் பணிக்கு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பள்ளி மாணவிகளுடன் இணைந்து அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) திருமதி.ராஜேஸ்வரி, ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.ஜானகி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### துறைமுகம் மேற்குப் பகுதி - 54 (அ) வட்ட துணைச் செயலாளர்

# எஸ்.சிவலிங்கம் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு பங்கேற்று வாழ்த்துகிறார்!

சென்னை, நவ. 20-

துறைமுகம் மேற்குப் பகுதி 54 (அ) வட்ட துணைச் செயலாளர் எஸ். சிவலிங்கம் புதல்வரும் கழகத் தோழருமான எஸ். சிலம்பரசன் - எம்.காயத்திரி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (20.11.2023 - திங்கட்கிழமை) மாலை 6.30 மணி அளவில் சென்னை - வால்டாக்டஸ் சாலை - அண்ணா பிள்ளை தெருவில் உள்ள சமுதாயக் கூடத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் - சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் இவ்விழாவில் - பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார்,

மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, ராஜேஷ் ஜெயின் எம்.சி., கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துக்குமார், பா.கதிரவன், ஜி. ராம மூர்த்தி, பா.அண்ணாதுரை, மாவட்டப் பிரதிநிதி வி.எம்.முருகவேல் உள்பட பலரும் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நடப்போம் நலம் பெறுவோம் நடை பயிற்சியை தேனி மாவட்ட ஆட்சியர், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் துவக்கி வைத்தனர். விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேது ராஜா, பேரூராட்சி மன்ற தலைவர் சந்திரகலா, பேரூர் செயலாளர் சரவணன், ஆண்டிபட்டி டி.எஸ்.பி.ராமலிங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு!

தென்காசி, நவ. 20-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள ஐந்தருவி,பழையகுற்றாலம், மெயின் அருவி, சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சில நாட்களுக்கு முன்பு பெய்தமழையினால்சீரான தண்ணீர் விழுகிறது.

இந்நிலையில், சபரி மலைக்குசெல்லும்அய்யப்ப பக்தர்கள் குற்றாலத்திற்கு வந்து செல்கிறார்கள். இதனால் அனைத்து அருவிகளிலும் ஐயப்ப பக்தர்களின் கூட்டம் அதிகரித்துகாணப்படுகிறது.

அருவிகளில் ஐயப்ப பக்தர்கள் ஆனந்தமாக குளித்துவிட்டு குற்றால நாதர் கோவிலில் தரிசனம் செய்து வருகின்றனர்.

மேலும் (ஞாயிறு) விடுமுறை என்பதால் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது. அருவிகளில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீரில் சுற்றுலா பயணிகள் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்து வருகின்றனர். வாகன நெருக்கடி மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி கூடுதல் போலீசார் அருவி பகுதிகளில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

# சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்கள்!

## கவலையுடன் காத்திருக்கும் உறவினர்கள்

உத்தரகாண்ட், நவ.20-

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் சில்க்யாரா தண்டல்கான் இடையே சுமார் 4.5 கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்பட்டு வரும் சுரங்கப்பாதை யின் ஒரு பகுதி கடந்த 12ந்தேதி இடிந்து விழுந்தது. இதில் 41 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்கள் ஆக்சிஜன் குறைந்த சூழ்நிலையில் அதற்குள் தவித்து வருகிறார்கள்.

சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி தொடர்ந்து ஒரு வாரமாக நடைபெற்று வருகிறது. தொழிலாளர்கள் வெளியே வருவதற்காக இடிந்து விழுந்த பகுதிக்குள் துளையிட்டு குழாய்களை செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட எந்திரம் தற்போது, பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பெங்களூர் வி. சிவசங்கர்

## நவம்பர் 20 (2003)



கருநாடக மாநில பொறுப்புக்குழுச் செயலாளராக பணியாற்றியவர். தலைமை செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர்.

பெங்களூர் மாநகராட்சி அலசூர் வட்டத்தில் நான்கு முறை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். மாநகராட்சி சுகாதாரக்குழுவிற்கு தலைவராகவும் மற்ற காலங்களில் அனைத்து குழுக்களிலும் உறுப்பினராகவும் தேர்வு பெற்று பணியாற்றியவர்.

1997இல் கருநாடக மாநில அரசு, இவரது மாநகராட்சி மன்ற உறுப்பினர் பணியினை பாராட்டி "கெம்பே கவுடா" விருது வழங்கி பாராட்டியது.

மேலும் இவரது தொண்டினை போற்றும் வகையில் இவர் வசித்த அலசூர் பகுதியில் உள்ள முக்கிய சாலைக்கு "சிவசங்கர் சாலை" என பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விலைவாசி உயர்வு, இந்தி எதிர்ப்பு ஆகிய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### இளைஞர் அணியின் பெருமையை

# நாடே உணரும் வகையில் மாநாட்டை நடத்திக் காட்டுவோம்!

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்ற மாநாட்டுக் குழுக்களின் செயலாளர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!



**சென்னை, நவ.20**

**" இளைஞர் அணியின் பெருமையை நாடே உணரும் வகையில் மாநாட்டை நடத்திக் காட்டுவோம்" என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.**

கழக இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாடு வரும் டிசம்பர் மாதம் 17–ஆம் தேதி சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ளது. மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக தலைமைக் கழகத்தால் 23 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. அந்த குழுக்களின் செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம், கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேசியதாவது:

"இளைஞர் அணியின் மாநில மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாநாட்டுக்குழுக்களில் இடம்பெற்றுள்ள குழுவின் செயலாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள அமைச்சர் – கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கும் மாநாட்டுக் குழுக்களின் அனைத்து செயலாளர்களுக்கும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநாடு என்பது அடிக்கடி நடைபெறுவது அல்ல. எப்போதாவது ஒருமுறைதான் நடைபெறுகிறது. நம் இளைஞர் அணியின் மாநில மாநாடு 16 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் நடைபெறுகிறது. அந்த சமயத்தில் நாம் இளைஞர் அணியில் இருக்கிறோம் என்பதே நமக்கான பெருமை. அதுவும் இந்த மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட குழுக்களில் நாம் இடம்பெற்றிருக்கிறோம் என்பது கூடுதல் பெருமை. அந்தவகையில் பல்வேறு மாநாட்டுக் குழுக்களில் இடம் பெற்றுள்ள உங்களுக்கு மீண்டும் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மிகச் சரியாக வடிவமைக்க முடியும்!**

வரும் டிசம்பர் 17–ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநாடு, நம் இளைஞர் அணியின் பெருமையை, கழகத்தின் கட்டமைப்பை இந்திய ஒன்றியமே உணர்ந்துகொள்ளும் வகையில் நடைபெற இருக்கிறது. ஒரு நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவதற்கு திட்டமிடுதல் என்பது மிகமிக அவசியமான ஒன்று. அந்த நிகழ்ச்சியின் நோக்கம் என்ன என்பதை உணர்ந்தால்தான், அந்த நோக்கம் நிறைவேறும் வகையில் அந்த நிகழ்ச்சியை மிகச்சரியாக வடிவமைக்க முடியும்.

100 பேர் கூடும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்துக்கே, பேச்சாளராக யாரை அழைக்கலாம், என்ன தலைப்பின் கீழ் அவரை பேச வைக்கலாம், பின்னணியில் ஃப்ளெக்ஸ் வைக்கலாமா, எல்இடி வைக்கலாமா? அப்படி வைக்கப்படும் ஃப்ளெக்ஸ் பேனரில் என்னென்ன வாசகங்கள் இடம் பெற வேண்டும், உள்ளூர் கட்சி நிர்வாகிகளுக்கு முறையாக தகவல் தெரிவிப்பது, மீடியாவுக்கு தகவல் சொல்வது, துண்டறிக்கை தயார் செய்வது... என பல்வேறு விஷயங்களை திட்டமிடுவோம்.

100 பேர் கூடும் கூட்டத்துக்கே அந்தளவுக்கு திட்டமிடுகிறோம் என்றால், லட்சக்கணக்கான இளைஞர்கள் கூடும் நம் இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கான ஏற்பாடுகள் எந்தளவுக்கு நேர்த்தியாக திட்டமிடப்பட வேண்டும் என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்திருப்பீர்கள்.

**பல மாநாடுகள் நடத்தியவர் அண்ணன் நேரு அவர்கள்!**

மாநாட்டுக்கான பணிகளை நாம் அனைவரும் இணைந்துதான் செய்யப்போகிறோம். ஆனால் இந்தப் பணியை அவர் பார்த்துவிடுவார், இவர் பார்த்துக்கொள்வார் என்று இருந்து எந்தப் பணியும் விடுபட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குழுவின் பணி என்ன என்பது குறித்து உங்கள் ஒவ்வொருவருக்கும் அன்பகத்தின் மூலம் தெளிவாக தெரிவிக்கப் பட்டு அதுகுறித்து விளக்கிக் கூறப்பட்டு உள்ளது.

**வெற்றிகரமாக நடத்திக் காட்டுவோம்!**

இந்த மாநாட்டை நடத்துவதற்கு நமக்கு மிகப் பெரிய பலமாக முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்கள் உள்ளார்கள். பல மாநாட்டை நடத்திய அனுபவம் அவருக்கு உள்ளது. இதில் நாம் என்ன தவறு செய்வோம் என பலர் காத்திருக்கிறார்கள். அதனால் விமர்சனத்துக்கு இடமளிக்காமல், இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக்காட்ட வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

**தலைவரின் நம்பிக்கையை நிரூபிப்போம்!**

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக தலைமைக் கழகமே மாநில மாநாட்டையோ, மண்டல மாநாட்டையோ நடத்துவது வழக்கம். ஆனால் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக மாநாட்டை நடத்தும் மிகப்பெரிய வாய்ப்பை, பொறுப்பை நம் கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணிக்கு வழங்கியுள்ளார்கள். தலைவர் அவர்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையை நம் செயலின் மூலம் நிரூபிக்க வேண்டியது நம் கடமை.

மாநாட்டுப் பணிகள் குறித்து உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் அமைச்சர் நேரு அண்ணன் அவர்களையும், அங்குள்ள மாவட்டச் செயலாளர்களிடமும், அன்பகத்திலும் நீங்கள் கேட்டுத் தெளிவு பெறலாம். வரும் 22ம் தேதி காலை சேலத்தில் செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு முன்பாக மாநாட்டுத் திடலை நேரு அண்ணன் அவர்களுடன் சென்று பார்வையிட உள்ளோம். அப்போதும் குழு செயலாளர்களான நீங்கள் வந்தால் திடலை பார்க்கும்போது நமக்கு தெளிவு கிடைக்கும். 22ம் தேதி காலை சேலத்தில் சந்திப்போம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

அதைத்தொடர்ந்து, மாநாட்டுக் குழுக்களின் செயலாளர்கள் ஒவ்வொருவரும் தங்களின் கருத்துகளை, எண்ணங்களை எடுத்துக் கூறினர். கூட்டத்தின் முடிவில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் உரையாற்றினார்.



மேனாள் இந்தியப் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா 27.11.2023 அன்று சென்னையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளதையொட்டி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ள உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் அவர்களுக்கு நேற்று (19.11.2023) கழகப் பொருளாளர் – நாடாளுமன்றக் குழு தலைவர் டி.ஆர். பாலு நேரில் சென்று அழைப்பிதழை வழங்கினார்.

### கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி.

# நீலகிரி மாவட்டத்தில் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு

*உதகை, நவ.20-*

*நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*இன்று 20.11.2023 - திங்கட்கிழமை அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.*

*21.11.2023 இன்று- செவ்வாய்கிழமை காலை 10.30 மணி: மாவட்ட கழக கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுதல்.*

*மாலை 4 மணி: உதகை நகர தி.மு.க. சார்பில முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பிங்கர்போஸ்ட் திரேசாஸ் பள்ளியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுதல்.*

*22.11.2023 - புதன்கிழமை அன்று மதியம் 2 மணி: டான்டீ தோட்ட தொழிலாளர்களுக்கு 20 சதவீத போனஸ் மற்றும் தினச்சம்ப ளம் ரூ.438 வழங்கி உதவிய தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும்,*

*இதற்கு உகந்த உதவிகளை செய்த நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்களுக்கு தோழமை தொழிற் சங்கங்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவேற்பு மற்றும் நன்றி தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்று தல்.*

*23.11.2023 - வியாழக்கிழமை காலை 11 மணி: குன்னூர் விவேக் டூரிஸ்ட் ஹோம் கூட்ட அரங்கில் குன்னூர் மற்றும் கோத்தகிரி பகுதி டான்டீ தோட்ட தொழிலாளர்கள் மற்றும் டான்டீ பணியாளர்களுடன் கலந்துரையாடல்.*

*மேற்கண்ட கழக நிகழ்ச்சிகளில் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனை வரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

### இன்று மாலை குரோம்பேட்டையில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (20.11.2023 திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி.சாலையில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

நவம்பர் 27ஆம் தேதி அன்று கழக இளைஞர்அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் கழக கொடி ஏற்றி நலத் திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மரக் கன்றுகள் நடுதல்.

டிசம்பர் மாதம் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாட்டில் திரளான இளைஞர் அணியினரை கலந்து கொள்ள செய்வது குறித்து.

சேலம் இளைஞர் அணி மாநாட்டையொட்டி இரு சக்கர வாகன பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் கழக இளைஞர் அணியினர் நம்முடைய மாவட்டத்தில் நவம்பர் 24, 25 தேதிகளில் பயணம் செய்வது குறித்து.

வாக்குச் சாவடி வாரியாக BLA 2 & BLC பாகமுகவர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர்களை சரி பார்க்கும் பணிகளை மேற்கொள்ளுதல்

கழக வளர்ச்சி.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்,**
செயலாளர்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### கடந்த மூன்று வாரங்களில் 3000 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு

# 6000 க்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

*சென்னை, நவ.20*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 18.11.2023 அன்று சென்னை, நொச்சிக்குப்பம் பகுதியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை தொடங்கி வைத்தார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:*

*கடந்த மாதம் 23.10.2023ந்தேதி தொடங்கி வருகின்ற டிசம்பர் 30.12.2023 ந் தேதி வரை இடைப்பட்ட சனிக்கிழமைகளில் மழைக்கால சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கடந்த மாதம் முதல் தற்போது வரை 4 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று வாரங்களில் நடைபெற்ற முகாம்களை பொறுத்தவரை ஒவ்வொரு வாரமும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த முகாம்களில் பயன்பெற்றிருந்தனர். ஒவ்வொரு வாரமும் 1000 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் 2000த்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாரமும் நடைபெறும் மருத்துவ முகாம்களில் 476 மருத்துவ நடமாடும் குழுக்களும், 805 RBSK வாகனங்களின் மூலம் பள்ளிச்சிறார்களுக்கான முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த மூன்று வாரங்களில் 6000த்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இன்று 4வது வாரம் நொச்சிக்குப்பம் பகுதியில் நடைபெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்த வாரம் 25.11.2023ந்தேதி முகாம் நடைபெற உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியினைப் பொறுத்தவரை ஒவ்வொரு மண்டலத்திற்கும் 3 என்கின்ற வகையில் 45 மருத்துவ முகாம்கள் திட்டமிடப்பட்டு நடத்தப் பட்டு வருகிறது.*

*வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் டெங்கு, இன்புளுயன்சா காய்ச்சல், அதிகரிக்க வாய்ப்பு இருப்பதால் இதனைக் கட்டுப் படுத்துகின்ற நோக்கில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை நடைபெற்ற முகாம்களில் சுமார் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு காய்ச்சல்களும், வறண்ட இருமல்களும், சளி போன்ற பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளானவர்கள் கண்டறியப்படுகிறார்கள். அப்படி கண்டறியப்படுபவர்களுக்கு தொடர் சிகிச்சைகள் நடத்தப் படுகின்றது. ஒன்றிய அரசு பல்வேறு மாநிலங்களில் டெங்கு போன்ற பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்று கடந்த 10 நாட்களுக்கு முன்பு சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்கள். ஆனால் தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாகவே மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகவும் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே பல்வேறு நடவடிக்கைகளை தொடங்கியிருக்கிறோம். பல்வேறு துறை செயலாளர்களுடனான ஒருங்கிணைப்புக் கூட்டம், மாவட்ட அதிகாரிகளுடான ஒருங்கிணைப்புக் கூட்டம், மக்கள் பிரதிநிதிகளுடான ஒருங்கிணைப்புக் கூட்டம், தலைமைச் செயலாளர்களுடான அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம் என்று தொடர்ச்சியாக நடத்தி மருத்துவ முகாம்கள் நடத்துவது குறித்து திட்டமிடப்பட்டது.*

*இப்படி பல நடவடிக்கைகளின் காரணமாக கடந்த ஜனவரி மாதம் முதல் தற்போது வரை டெங்குவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6,777 பேர் என்கின்ற வகையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 564 பேர், நேற்றுக்கான பாதிப்பு 52, ஒவ்வொரு நாளும் 40 பேர் டெங்குவினால் பாதிக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டு அரசினைப் பொறுத்தவரை புகை அடிக்கும் மருந்துகள் Fogging Machines 16,005 லிட்டரும், Temephos என்கின்ற மருந்து 44,891 லிட்டரும் கையிருப்பில் இருக்கின்றது. Phyrethrum என்கின்ற மருந்து 61,513 லிட்டர் கையிருப்பில் இருக்கின்றது. Technical Malathion என்கின்ற மருந்து 10561 லிட்டர் கையிருப்பில் இருக்கின்றது.*

*தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் கடந்த ஜீன் திங்கள் 6ந்தேதி 500க்கும் மேற்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப் பட்டுள்ளது. 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு அதில் 500க்கும் மேற்பட்ட நலவாழ்வு மையங்கள் இதுவரை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த 500 நலவாழ்வு மையங்களில் 140 நலவாழ்வு மையங்கள் சென்னையில் மட்டுமே இருக்கின்றது. இந்த 140இல் ஒன்று நொச்சிக்குப்பம் பகுதியில் உள்ள இம்மருத்துவமனை. இந்த நலவாழ்வு மையத்தில் தினமும் 50க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்று வருகின்றனர்.*

*இந்த நலவாழ்வு மையத்தில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் என்று நான்கு பணியிடங்களுடன் இம்மருத்துவமனை இயங்கி வருகிறது.*

*சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 200 நலவாழ்வு மையங்கள் அமைக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது. எனவே தற்சமயம் 140 நலவாழ்வு மையங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.*

*தற்சமயம் 35 நலவாழ்வு மையங்களுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் இருக்கின்றது. தமிழ்நாடு முழுவதிலும் 120 நலவாழ்வு மையங்களுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்றிருக்கிறது.*

*இந்த நலவாழ்வு மையங்களுக்கு மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் நியமிக்கும் அரசு ஆணை வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் திறந்து வைக்கப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி. ஷரண்யா அறி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.டி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் திருமதி.அ.ரேவதி, மண்டல அலுவலர் உள்ளிட்ட உயரலுவலர்கள் கலந்துகொண்டனர்.*



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் கொத்தியாபாக்கம் டி.தேசிங்கு ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பல்வேறு வாக்குச்சாவடி முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அருகில் ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ்குமார், பெ.வினோத்குமார், கு.தமிழ்செல்வி, பொறியாளர் எம்.மோகன், என்.லட்சுமி, ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி மாசெ.ராஜேஷ்குமார்,ஜி.துர்காபிரசாத், ஜி.சுகுமார், கட்டதொட்டி குணா, டி.மணிவண்ணன், கார்த்தி, ராஜேஷ், உள்பட கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள் பாக முகவர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்



ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 40வது வார்டு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையும், சட்டமன்றத் தேர்தலில் நாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் முதற்கட்டமாக ரூ68 லட்சம் மதிப்பீட்டில் நவீன மீன் அங்காடி கட்டும் பணிக்கு ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் தா.இளைய அருணா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், வீ.வெற்றி வீரன், என்.மருதுகணேஷ், இர.பொன்இளவரசன், இ.ரவிக்குமார், சி.மணிகண்டன், பகுதி நிர்வாகிகள் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, கே.பி.சதீஸ் குமார், எஸ்.பி.எஸ்.புத்தன், வட்ட செயலாளர்கள் வ.மு.கஜேந்திரன், பா.குமார், எஸ்.தமிழ்செல்வன், ஜி.ஏழுமலை, எஸ்.எல்.சுந்தர், ஆர்.ஏ.எம்.சசிக்குமார், மாமன்ற உறுப்பினர் எம்.ரேணுகா உள்ளிட்ட மீனவர் சங்க நிர்வாகிகள், வணிகர் சங்க பிரதிநிதிகள், வியாபாரி சங்க நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 40வது வட்ட செயலாளர் மா.நாகராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர் என்.குமாரி நாகராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.


காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்
உத்திரமேரூர் ஒன்றிய-பேரூர் சார்பில்
கலைஞர் நூற்றாண்டு விழா
இளைஞர் எழுச்சி நாள்
மாபெரும் பொதுக்கூட்டம்
சிறப்புரை :-
மாண்புமிகு. மா.சுப்பிரமணியன் B.A.,LL.B.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்,
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
அவர்களே வருக! வருக!!
நாள் : 20.11.2023 திங்கட்கிழமை / மாலை 05.00 மணி
இடம் : கே.எம்.ஆர்.பேருந்து நிலையம், உத்திரமேரூர்.
முரசொலி
அன்புடன் வரவேற்கும் : - க.சுந்தர் B.Sc.,MLA., மாவட்ட கழக செயலாளர்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க


கலைஞர் 100 1924 - 2023
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
(கலைப் பண்பாட்டு இயக்ககம்)
வழங்கும்
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்
அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும்
உலக நாடக தினத்தை முன்னிட்டு நாடக விழா
நாள்: 2023 நவம்பர் 20, 21, 22 (திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமை) நேரம்: மாலை 6.00 மணி
இடம்: பாரதிய வித்யா பவன் அரங்கம், மயிலாப்பூர், சென்னை - 600 004.
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
திரு மு.பெ.சாமிநாதன் அவர்கள்
மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர்
திருமதி பி.கீதாஜீவன் அவர்கள்
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள்
ஆகியோர் விழாப் பேருரையாற்றவும்
மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர்
திரு சா.பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர்,
தென்னிந்திய நடிகர் சங்கத் துணைத்தலைவர்
திரு பூச்சி எஸ்.முருகன் அவர்கள்
பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணைமேயர்
திரு எம்.மகேஷ்குமார் அவர்கள்
மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர்
திரு மயிலை த.வேலு அவர்கள்
ஆகியோர் வாழ்த்துரை வழங்கவும் இசைந்துள்ளார்கள்.
அனைவரும் வருக!!
விஜயா தாயன்பன்
உறுப்பினர் - செயலாளர்
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
வாகை சந்திரசேகர்
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் /
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்
சூரபத்மன்
வரலாற்று நாடகம்
தயாரிப்பு: திரு. துரை பாலசுந்தரம்
தனி ஆவர்த்தனம்
சமூக நாடகம்
தயாரிப்பு: திரு. ஆடுதுறை பாஸ்கர்
இஸ்கூல்
சமூக நாடகம்
தயாரிப்பு: காந்தி வேஷம் திரு. ரெஜின் K.சகாயராஜ்
அழைப்பின் மகிழ்வில்: M.R.M.பாலசுப்பிரமணியன் B.A.,
மாவட்ட அவைத்தலைவர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.
மாநிலத் தலைவர், தமிழ்நாடு இசை நாடக கலைஞர்களின் மாநில பேரவை


நாள் : 20-11-2023 திங்கட்கிழமை
மாலை 6.00 மணிக்கு மேல்
இடம் : எண்.50ல், பாரதிதாசன்
நகர், சென்னை - 37 முகப்பேர்,
உள்ள அவர்களின் இல்லத்தில்
முன்னாள் அவைத் தலைவர் மதுரவாயல் வடக்கு பகுதி முன்னாள் திருவள்ளூர் மாவட்ட பிரதிநிதி
அம்பத்தூர் பகுதி முன்னாள்- 37வது வார்டு மாமன்ற உறுப்பினர் 36வது வட்ட கழக செயலாளர்
திருவேற்காடு கருமாரியம்மன் கோவில் முன்னாள் அறங்காவலர்
Lion M.A.அன்பு Ex.MC.,
கழக முன்னோடி
அவர்களின்
முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி
நிகழ்ச்சி வருகை தரும் சிறப்பு அழைப்பாளர்கள்
மாண்புமிகு. மா.சுப்பிரமணியன் B.A.LLB.,
தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் / சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்
காரம்பாக்கம் க.கணபதி MLA., ஜோசப்சாமுவேல் MLA.,
மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் / மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர்
அம்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் / அம்பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர்
நொளம்பூர் வே.ராஜன் M.A.,MC.,
11 வது மண்டல குழு தலைவர் / பகுதி கழக செயலாளர்-மதுரவாயல் வடக்கு பகுதி
பி.கே.மூர்த்தி
7 வது மண்டல குழு தலைவர் / தலைமை செயற்குழு உறுப்பினர்
அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி
வில்லிவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் / அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்
பகுதி கழக நிர்வாகிகள் : ஆ.மாலினி MC., தீ.பாலாஜி எம்.உதயகுமார் மாவட்ட அமைப்பாளர் : கே.குமரேசன்
வட்ட கழக செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள்
எஸ்.ஜி.மாதவன் எம்.கே.பி.அண்ணாதாசன் பா.ஆலன்
எம்.இ.ஸ்டாலின் சி.சசிகுமார் எம்.ரூபன் ரமணி மாதவன்
நினைவுகளுடன் : கே.நீலகண்டன் Ex M.C., எம்.எம்.ஜெயரத்தினம் B.A.B.L.,
92 வது வட்ட கழக செயலாளர்
என்றும் தந்தையின் நீங்கா நினைவில் அன்பு மகன்
M.A.செந்தில்சுரேஷ் B.Tech.,
பகுதி கழக துணை செயலாளர்
மதுரவாயல் வடக்கு பகுதி, சென்னை தெற்கு மாவட்ட திமுக



தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு
வழங்கப்பட்டு வந்த ஒருநாள் ஊதியம்
ரூ.375/-லிருந்து
ரூ.438/- ஆக உயர்த்தி
ஊழியர்களுக்கு பண்டிகை காலத்தில்
20% BONUS வழங்கிட உத்தரவிட்ட
தொழிலாளர்களின் ஒப்பற்ற பாதுகாவலர்
இந்தியாவின் இரும்புத் தலைவர்
மக்கள் போற்றும் மாண்புமிகு
முதலமைச்சர்
அவர்களுக்கு மாவட்ட
மக்களின் சார்பில்
நன்றி! நன்றி!
கலைஞர்
100
1924 - 2023
நன்றி
ஆ.இராசா B.Sc., M.L. M.P
கழக துணைப் பொதுச்செயலாளர்
நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி
பா.மு.முபாரக் நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர்
Jayam Arts
அன்புடன் க.ராமச்சந்திரன் சுற்றுலாத்துறை அமைச்சர்



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (18.11.2023) தேனாம்பேட்டை மண்டலம், வார்டு125, நொச்சிக்குப்பம், மெரினா கடற்கரை லூப் சாலை அருகில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் திருமதி அ. ரேவதி, மண்டல அலுவலர் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மறைந்த முகப்பேர் எம்.சி.சந்திரன் மகன் எம்.சி.மதன் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ் இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் க.கணபதி, ஜோசப் சாமுவேல், ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, ஆவடி மேயர் ஜி.உதயகுமார், பகுதி செயலாளர்கள் மண்டலக் குழு தலைவர்கள் நொளம்பூர் வே.ராஜன், பி.கே.மூர்த்தி, டி.எஸ்.பி.ராஜகோபால், ஜசி எப்.வ.முரளிதரன், மாமன்ற உறுப்பினர் எம்.கமல், எம்.எம்.ஜெயரத்தினம், எல்.பி.எப் மோகன், டாக்டர் அனிஷ் டாக்டர் என்.வி.என்.சோமு, சுப்பிரமணியன், ஆ.மாலினி, எம்.ஏ.செந்தில், சுரேஷ், எம்.இ.சேகர், எம்.இ.ஸ்டாலின், கே.வி.திலகர், வட்ட செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், ப.ஆலன், எம்.கே.பி.அண்ணாதாசன், கே.குமரேசன், ஏ.சுந்தரி, ஆர்.விமலன், எம்.ஏ.குட்டி, எம்கேபி.உதயசூரியன், ஆர்.கர்ணல், ஆர்.ரசூல்தீன், ஆர்.ராகேஷ், கே.ராஜ்குமார்,கோ.சேகர்லால், எம்.ஜி.மாரியப்பன், வி.ஆ.கலைஞர் பித்தன், எஸ்.ஞானசேகரன், எம்.பி.சீனிவாசன், டி.கலைநேசன், எம்.என்.ராஜ்கமல், டாக்டர் முபாரக், சரவணன், எம்.பி.கணபதி, எம்.பி.கண்ணன், வி.தமிழ் செல்வம், கொரட்டூர் ஜனா,எஸ்.சந்தானம்,டி.புகழேந்தி, தமிழ் அழகன், சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர். முடிவில் மாவட்டப் பிரதிநிதி எம்.சி.எழிலரசு, பகுதி துணை அமைப்பாளர் எம்.சி.இளங்கோவன் ஆகியோர் நன்றி கூறினர்.

### தேசிய பெண்குழந்தைகள் தினத்தில் மாநில விருதுக்கு

# தருமபுரி மாவட்டத்தில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

### மாவட்ட ஆட்சியர் தகவல்!

தருமபுரி, நவ. 20-

தேசிய பெண் குழந்தைகள் தினத்தில் மாநில விருது வழங்கிட தருமபுரி மாவட்டத்தில் பெண் குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும், பாடுபட்டு வீரதீர செயல் புரிந்து வரும் 13 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளை சிறப்பிக்கும் முகமாக அதற்கான மாநில அரசு விருது ஒன்றை அறிவித்து அரசாணை பிறப்பித்து கடந்த 2017 -ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இதன்படி வருடந்தோறும் மேற்குறிப்பிட்டவாறு சேவை புரிந்து வரும் சிறந்த குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது. அதே போன்று, வருகிற 24 ஜனவரி 2024 -ல் தேசிய பெண் குழந்தை தினத்தில் மாநில விருது வழங்கிட 13 வயதிற்கு மேற்பட்ட 18 வயதிற்குட்பட்ட (31 டிசம்பர் 2023 ன்படி ) மேற்குறிப்பிட்டவாறு தகுதியான பெண் குழந்தைகளிடமிருந்து விண்ணப்பங்கள் 28.11.2023 வரை வரவேற்கப்படுகின்றன.

விருதிற்கான விண்ணப்பங்கள் மாவட்ட முதன்மைகல்வி அலுவலர்/ மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்/ மாவட்ட கல்வி அலுவலர்/ மாவட்ட திட்ட அலுவலர் /காவல்துறை/ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் வாயிலாக உரிய முன்மொழிவுகளுடன் மாவட்ட சமூக நல அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்து, மாவட்ட ஆட்சியர் பரிந்துரையுடன் சமூக நல ஆணையரகத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்படும். மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மாநில அளவில் தேர்வுக் குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டு, அனைத்து தகுதிகள் பெற்ற ஒரு பெண் குழந்தை தேர்வு செய்யப்பட்டு 24.01.2024 அன்று மாநில விருது வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி தெரிவித்துள்ளார்.

# நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

திருவாரூர், நவ. 20 -

நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் நீட் தேர்வைரத்து செய்ய கோரும் மாபெரும் கையெழுத்து இயக்கம் திருவாரூர் மாவட்ட மாணவரணி சார்பில் கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய செயலாளர் நா.கவியரசு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன் உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவை அழிக்கும் நோக்கத்தில் ஒன்றிய பி.ஜே.பி. அரசால் கொண்டுவரப்பட்டிருக்கும் நீட் தேர்வை அகற்றும் சட்டப்போராட்டத்தை முழு வீச்சில் நடத்தும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் முயற்சிக்கு மேலும் ஆதரவு அளிக்கும் வகையில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் "நீட் விலக்கு அதுவே நம் இலக்கு" எனும் மாபெரும் கையெழுத்து இயக்கம் தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடைபெற்று வருகிறது.

மாணவர்களும் இளைஞர்களும் தாமாக முன்வந்து கையெழுத்திட்டு வருகின்றனர்.

நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய கழகம் வடுவூரில் நீட் ரத்து செய்ய கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் கழக சட்டத்திட்ட திருத்த குழு உறுப்பினர் பி.இராசமாணிக்கம் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் நா.கவியரசு முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சா.பகலவன் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பா.அரவிந்த், நீலமேகம் (தொ.மு.ச.), கல்யாணசுந்தரம், சண்முகம், கமலஹாசன், செல்வேந்திரன், இளங்கோவன், மற்றும் கழக மாணவர் அணி, இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளும், இளைஞர்களும், பொதுமக்களும் தமாக முனவந்து நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட்டனர். அதேபோல் செல் போன் செயலியின் மூலமாகவும் 3000மேற்பட்டோர் கையெழுத்திட்டு நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கையெழுத்து இடும் பணிகளை மாணவரணி சார்பில் முழுவீச்சில் நடத்தி வருகின்றனர் .

### கம்பம் நகர 27வது வார்டு கவுன்சிலர்

# ஏ.விருமாண்டி தாயார் முத்துப்பேச்சி (எ) அம்மாபிள்ளை மறைவு!

### மாவட்டச் செயலாளர்கள் என்.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. - தங்க தமிழ்ச்செல்வன் அஞ்சலி

கம்பம், நவ.20-

கம்பம் நகர்மன்ற 27வது வார்டு தி.மு.க. உறுப்பினரும், கழக முன்னோடியுமான ஏ.விருமாண்டி தாயார் முத்துப்பேச்சி என்ற அம்மாபிள்ளை வயது (105), அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2023) பிற்பகல் மறைவு எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது உடலுக்கு தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் கம்பம் இரா.பாண்டியயன், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்செல்வன் பி.தெய்வேந்திரன், எம்.பி., தேர்தல் பணிக்குழு செயலாளர்மு.ஜெயக்குமார் தீர்மானக்குழு இணைசெயலாளர், தேனி மாவட்ட துணை செயலாளர் குரு.இளங்கோ கம்பம் வடக்கு நகர செலயாளர் எம்.சி. வீரபாண்டி யன, கம்பம் தெற்கு நகர பொறுப்பாளர், பி.பால்பாண்டி ராஜா, கம்பம் நகர்மன்ற தலைவர் வனிதா நெப்போலியன், கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கப் பாண்டி, கம்பம் நகர முன்னாள் பொறுப்பாளர் வழக்கறிஞர் துரை. நெப்போலியன், தொழில் அதிபர் எம்.ஏ., அரசேந்திரன்,

கம்பம் நகர்மன்ற முன்னாள் தலைவர் எஸ்.டி.டி. இளங்கோவன், கம்பம் தெற்கு நகர துணை செயலாளர் தக்காளி டி.செல்வம், தேனி தெற்கு மாவட்ட சுற்றுசூழல் மாவட்ட துணை அமைப்பாளர் பி. தங்கப்பாண்டியன், தேனி மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் இந்திரா கர்ணன், குரு.குமரன் தேனி தெற்கு மாவட்ட தொழிலாளர், அணி அமைப்பாளர், பேச்சாளர் எஸ்.முருகேசன், தேனி தெற்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர், தேனி தெற்கு மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர், பொன்.விஜய், எஸ். சாதிக் பட்சா பிஸ்மி மெடிக்கல், சி.எம்.உதயக்குமார் தேனி தெற்கு மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர், பி.தென்னரசு தேனி தெற்கு மாவட்ட



சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர், கம்பம் நகர வடக்கு துணை செயலாளர் எஸ்.பி.சுருளி,

கம்பம் தெற்கு நகர தெற்கு நகர அவைத் தலைவர் ஏ.ராஜன், பொறியாளர் ஜெ.ராம்குமார், சுருளிப்பட்டி மொக்கராசு, ஓ.பி. பாண்டியன், எஸ்.எம். பாண்டியன் முன்னாள் நகர அவைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், சுல்தான் சல்மான் பாரிசி, எஸ்.டி. மணிகண்டன், ராஜா, அமுதா எபிநேசர், நல்லபெருமாள் மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர், சி.பி.எம். ஏரியா செயலாளர் தோழர் லெனின், தோழர் பன்னீர், தோழர் மோகன், வாழைப்பழ கடை கே.ராஜ்குமார், டி. மணிகண்டன் 33 வது வார்டு செயலாளர், பன்னீர் மற்றும் அனைத்துக் கட்சி தோழர்களும், கழக முன்னோடிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.


மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி!



மறைவு : 20.11.2020

C.கார்மேகம்

முன்னாள் வட்ட செயலாளர்

மகன்: K.கோபி

114 வது வட்ட செயலாளர்

இவண்: 114வது வட்ட தி.மு.க

சேப்பாக்கம் பகுதி

சென்னை மேற்கு மாவட்டம்



திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருச்சி எஸ்.ஏ.ஜி. ராபி

நவம்பர் 20 (2004)



திருச்சி நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பணியாற்றியவர்.

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (19.11.2023) சென்னை அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், பெருநகர சென்னை மாநகராட்சி 7வது மண்டலம், 88வது வார்டுக்குட்பட்ட பகுதியில் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா, விளையாட்டு மைதானம், நவீன ஸ்கேட்டிங் மைதானம், செயற்கை நீரூற்று, பாடி மேம்பாலம் அருகே பொது கழிப்பிடம் உள்ளிட்ட மக்கள் நலத்திட்ட பணிகளையும் மற்றும் 88வது மாமன்ற உறுப்பினர் அலுவலகம் (ம) மாநகராட்சி அலுவலகம் ஆகியவற்றை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் திறந்து வைத்து, 1000 மரக்கன்றுகள் நடும் விழாவை தொடங்கி வைத்து, 140 மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு 14 வகையான மளிகை பொருட்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் (அம்பத்தூர்) ஜோசப் சாமுவேல், (தி.வி.க.நகர்) தாயகம் கவி, மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர்கள் பி.கே.மூர்த்தி, திருமதி.சரிதா மகேஷ் குமார், மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர்கள் விஸ்வநாதன், திருமதி.சாந்தகுமாரி, வார்டு உறுப்பினர்கள் திருமதி.ஜி.வி.நாகவல்லி பிரபாகரன், டி.எஸ்.பி.இராஜகோபால், திருமதி.அமுதா, திருமதி.சாரதா, திருமதி.பாத்திமா, திருமதி.ரத்னா, திருமதி.பொற்கொடி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சட்ட மசோதாக்களுக்கு

# ஆளுநர் உடனே ஒப்புதல் அளிக்க வேண்டும்!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அறிக்கை!

சென்னை, நவ.20-

உச்சநீதிமன்றம் உத்தரவிடும்வரை காத்திருக்காமல் சட்ட மசோதாக்களுக்கு தமிழ்நாடு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அக்கட்சியின் நிறுவனத் தலைவர் தொல். திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-



பல்கலைக்கழக வேந்தர்களாக முதலமைச்சரை நியமித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 10 சட்ட மசோதாக்களைக் காரணம் ஏதும் குறிப்பிடாமல் ஆளுநர் திருப்பி அனுப்பியிருந்தார். அவற்றை மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்காகத் தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ளது. அவற்றை, உச்சநீதி மன்றம் உத்தரவிடும்வரை மீண்டும் கிடப்பில் போட்டு வைக்காமல் தமிழ்நாடு ஆளுநர் உடனே ஒப்புதல் அளிக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

“இந்தியாவில் உயர்கல்வி பயிலும் மாணவர்களில் கிட்டத்தட்ட 85% பேருக்கு மாநில அரசுகள் உருவாக்கிய பல்கலைக்கழகங்கள் தாம் உயர்கல்வியை வழங்குகின்றன” என 2019-20 ஆம் ஆண்டுக்கான உயர்கல்வி குறித்த அனைத்திந்திய ஆய்வறிக்கை (AISHE) தெரிவிக்கிறது. உயர்கல்வியிலும், ஆராய்ச்சிக் கல்வியிலும் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கும் மாநில மாகத் தமிழ்நாடு திகழ்கி றது. அது மட்டுமின்றி இந்தியாவின் முதன்மையான 100 பல்கலைக்கழகங்களில் தமிழ்நாட்டிலுள்ள 9 மாநில அரசுப் பல்கலைக்கழகங்கள் இடம் பிடித்துள்ளன.

மாநில அரசுகள் தமது நிதியைக்கொண்டு உருவாக்கும் பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக ஆளுநரை நியமிக்க வேண்டுமென எந்த சட்ட நிர்ப்பந்தமும் கிடையாது. அரசமைப்புச் சட்டம் வரையறுத்திருக்கும் ஆளுநரின் பணிகளில் பல்கலைக்கழக வேந்தராக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை. தனியார் நடத்தும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் அவற்றின் உரிமையாளர்கள்தான் வேந்தர்களாக உள்ளார்கள். அவற்றில் ஆளுநருக்கு எந்த வேலையும் கிடையாது.

இந்தியா சுதந்திர மடைந்தபின் மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சியே ஆட்சி செய்ததால் ஆளுநர்களை வேந்தர்களாக நியமிக்கும் மரபு அறிமுகமானது. அதன் பிறகு ஆட்சிக்கு வந்த கட்சிகளும் அதே மரபைப் பின்பற்றி வந்தன. அதையே வாய்ப்பாக வைத்து ஆளுநர்களைப் பயன்படுத்தி பா.ஜ.க. அல்லாத மாநிலங்களில் உயர் கல்வியை சீரழிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

குஜராத் முதலமைச்சராக நரேந்திர மோடி இருந்தபோது குஜராத்தில் இருக்கும் 14 மாநில அரசுப் பல்கலைக்கழகங்களில் அப்போது வேந்தராக இருந்த ஆளுநரை நீக்கி விட்டு முதலமைச்சரான தன்னை வேந்தராக நியமித்து சட்டம் இயற்றினார். அதற்கு காங்கிரஸால் நியமிக்க ப்பட்டிருந்த ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் தரவில்லை. மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பா.ஜ.க.வைச் சேர்ந்த ஓ.பி.கோலி குஜராத்தின் ஆளுநர் ஆனதும் 2015 இல் அந்த சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் தந்தார். இப்போது முதலமைச்சர் தான் அங்கே வேந்தராக உள்ளார். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று வெளிநடப்புச்செய்தபா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் குஜராத்தில் மோடி எடுத்த நடவடிக்கை தவறு என்கிறார்களா?

மத்திய மாநில உறவுகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட ஆணையங்கள் ஆளுநரை வேந்தராக நியமிக்க வேண்டாம் என்றுதான் பரிந்துரை செய்துள்ளன. “அரசியலமைப்புச் சட்டத்தால் முன்வைக்கப்படாத ‘பல்கலைக்கழக வேந்தர்’ முதலான அதிகாரங்களை ஆளுநருக்கு வழங்குவதை மாநில சட்டமன்றங்கள் தவிர்க்க வேண்டும்” என்று சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்துள்ளது.

“ஆளுநரை வேந்தராக நியமிப்பதால் வீண் சர்ச்சைகளுக்கும், பொது மக்களின் விமர்சனங்களுக்கும் அவர் ஆளாக நேரிடும்” என பூஞ்சி கமிஷன் தெரிவித்துள்ளது.

எனவே, ஆளுநரை பல்கலைக்கழக வேந்தராக நியமிப்பதில்லை என்ற தமிழ்நாடு அரசின் முடிவு அரசியல் சட்டப்படி சரியானது; மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்கு உதவக்கூடியது. இதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வரவேற்று ஆதரிக்கிறோம்.

தமிழ்நாடு ஆளுநர் இப்போதாவது தனது அதிகாரம் என்னவென்பதைப் புரிந்துகொண்டு இந்த மசோதாக்களுக்கு ஒப்புதல் தரவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிறுவனர் - தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.


தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை - கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : மொத்தத் தொகை

மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு எண். 42/ TVM- CLE / 2023 - 2024/ Dated. 16.11.2023

கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் திருவண்ணாமலை பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட சிறப்பு தலைமைப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிக்கு 08.12.2023 அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணிவரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. http://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 23.11.2023 முதல் 08.12.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதிகாண் படிவம் என குறிக்கப்பட்ட உறை (உறை எண்.1) மட்டும் 08.12.2023 அன்று Server System நேரப்படி பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அரசு மருத்துவமனையில் புதிய TAEI (தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையம்) கட்டடம் கட்டும் பணி. | 279.00 | ரூ.1,49,500/- | 8 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி : வகுப்பு III மற்றும் அதற்கு மேல்.

முன் வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். விலை வீத மாறுதல் (Price Adjustment Clause) மேற்காணும் பணிக்கு பொருந்தும்.

இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து.,

கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம், திருவண்ணாமலை -4

செ.ம.தொ.இ / 6082 / ஒப்பந்தப்புள்ளி /2023


### நாளை நடைபெறுகிறது!

# சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் - மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (21.11.2023-செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி அளவில் காரைக்குடியில் உள்ள மாவட்டதி.மு.க. அலுவலகமான-தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில், பசும்பொன் தா. கிருட்டிணன் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்புஅணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

வாக்காளர் சேர்க்கை முகாம்.

சிவகங்கை மாவட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்-இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வருகை,

இளைஞர் அணிச் செயலாளர் பிறந்தநாள் விழா.

திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் பயன்பெறும் படிவத்தைப் பூர்த்தி செய்தல்.

கழக வளர்ச்சிப் பணிகள்.

**அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்**
செயலாளர்
சிவகங்கை மாவட்ட தி.மு.க.

# ஜம்மு-காஷ்மீரில் துப்பாக்கிச் சண்டை!

குல்காம், நவ.20-

ஜம்மு-காஷ்மீரில் 2வது நாளாக நடைபெற்று வரும் துப்பாக்கி சண்டையில் 5 லஷ்கர்இதொய்பா தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

குல்காம் மாவட்டம் சாம்னு பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்புப் படையினர் நேற்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை வெடித்தது. இந்த சண்டை 2வது நாளாக இன்றும் நீடித்தது. இந்த சண்டையில் இதுவரை 5 லஷ்கர் இதொய்பா தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீடு தீப்பிடித்து மளமளவென எரிந்தது. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

மேலும் சில தீவிரவாதிகள் அங்கு பதுங்கியிருந்து கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு பாதுகாப்புப் படையினரும் பதிலடி கொடுத்து வருவதால், துப்பாக்கி சண்டை தொடர்ந்து நீடிக்கிறது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 5வது மண்டல பேச்சுப்போட்டி கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் பெருங்குடி டாக்டர். அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் கே.ஜே.சரவணன், மறைமலை மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிக்கொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கழக சட்டத்துறை சார்பில்

# கல்லூரி மாணவர்களுக்கான 5வது மண்டல பேச்சுப் போட்டி!

## தலைமை : என்.ஆர்.இளங்கோ! கே.எஸ்.இரவிச்சந்திரன் - பச்சையப்பன் - சந்துரு பங்கேற்பு!

சென்னை, நவ.20-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதல்வர் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 5வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில் பெருங்குடி டாக்டர். அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் கே.ஜே.சரவணன், மறைமலை மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக தலை மைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிகொண்டான் மற்றும் நன்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற விழுப்புரம் சட்டக்கல்லூரி மாணவர் கணேஷ் அவர்களுக்கு ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்;

இரண்டாம் பரிசு பெற்ற சத்தியபாமா சட்டக் கல்லூரி மாணவி ஷப்திகா அவர்களுக்கு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்;

மூன்றாம் பரிசு பெற்ற ஆவடி வேல்டெக் கல்லூரி மாணவர் தமிழ்வளவன் அவர்களுக்கு ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்;

ஆறுதல் பரிசு பெற்ற சத்தியபாமா சட்டக்கல்லூரி மாணவி ஷியாம்லி அவர்களுக்கும், டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக மாணவி ஷாலினி அவர்களுக்கும் தலா ரூபாய் 5,000/ வெண்கலப்பதக்கம், சான்றிதழும் மற்றும் கலந்துகொண்ட மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இப்பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் டிசம்பர் 6 அன்று நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

# 6 வது இயற்கை மருத்துவ தினம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் காணொலியில் சிறப்புரையாற்றினார்!

சென்னை,நவ.20-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 18.11.2023 அன்று 6வது இயற்கை மருத்துவ தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவரது உரை பின்வருமாறு:

ஆண்டுதோறும் நவம்பர் 18 ஆம் நாள் இயற்கை மருத்துவ தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று 6வது இயற்கை மருத்துவ தினம் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் 178 அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையங்களிலும், அனைத்து அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும் மற்றும் அனைத்து இந்திய மருத்துவ மையங்களிலும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விழிப்புணர்வு விழாவாக இயற்கை மருத்துவ தினம் கொண்டாடப்படுகிறது. சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் கொண்டாடப்படும் இயற்கை மருத்துவ தினத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ கண்காட்சி, இயற்கை மருத்துவ சிகிச்சை அளிப்பது, மருத்துவ கருத்தரங்கம், ஆரோக்கிய அங்காடிகள், மூலிகை செடி கண்காட்சி, மருத்துவ பரிசோதனை மற்றும் இயற்கை உணவு கண்காட்சி போன்ற நிகழ்சிகள் நடைபெறுகிறது. இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டுமே ஐந்து இந்திய மருத்துவ முறைகளுக்கும், அதற்குரிய அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளது சிறப்பம்சமாகும்.

குறிப்பாக இரண்டு அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இதனால் தமிழ்நாடு யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தில் இந்தியாவிற்கே முன்மாதிரியாக திகழ்கிறது. யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லாத சிகிச்சைகளான உபவாச சிகிச்சை, யோகா சிகிச்சை, மசாஜ் சிகிச்சை, நீராவி குளியல், வாழை இலை குளியல், மண் குளியல், காந்த சிகிச்சை, நிறசிகிச்சை, நீர் சிகிச்சை, இயற்கை உணவு சிகிச்சை, இயற்கை மூலிகை சிகிச்சை, அக்குபஞ்சர், அக்குப்பிரசர் நறுமண சிகிச்சை மற்றும் மன நல ஆலோசனை போன்றவை அளிக்கப்படுகிறது.

உடலையும் அதன் உள் உறுப்புகளையும் பலம் பெறச்செய்து அதை புத்துணர்ச்சி அடைய செய்கிறது. நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் இருப்பதோடு, ஆயுளை நீட்டிகிறது. நோய்கள் வராமல் தடுக்கிறது. வந்த நோயினைக் கட்டுக்குள் வைக்கிறது. கோபத்தையும், பயத்தையும் நீக்கி மனதையும் உடலையும் சாந்தபடுத்துகிறது. அதிகப்படியான உடல் எடையை குறைக்கிறது. தசைகளின் இறுக்கத்தை தளர்வடையசெய்து முதுகு வலி, கால் வலி போன்ற வலிகளில் இருந்து விடுபடசெய்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த யோகா பயிற்சியை அனைவரும் மேற்கொண்டு உடல் நலத்துடன் வாழ வேண்டும்.


இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை ஆணையர் திருமதி.மைதிலி கே.ராஜேந்திரன், இணை இயக்குநர் (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) மரு.என்.மணவாளன், சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் நிறுவனத்தின் இயக்குநர் (பொ) மரு. வெங்கடேஸ்வரன் உள்ளிட்ட உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கவிஞர் பொன்னிவளவன்

### நவம்பர் 20 (1998)



**தி.மு.க. இலக்கிய அணியின் தலைவராக பணியாற்றியவர்.**

**“கவியரங்குகள் பலவற்றில் பொன்னிவளவன் பாடிய கவிதைகள் எப்போதும் தன்மானத் தமிழர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். சாகாத கவிஞர்களின் வரிசையிலே இணைந்துவிட்ட அந்த உடன்பிறப்பை கழகமும், கழகக் கண்மணிகளும் என்றும் மறந்திட இயலாது” என தலைவர் கலைஞரால் புகழந்துரைக்கப்பட்டவர்.**

**தூத்துக்குடி நீதிமன்றத்தில் சட்ட எரிப்பு வழக்கில் நீதிபதி முன்னர் கவிதை வாக்குமூலம் தந்து கடுங்காவல் தண்டனை பெற்றவர்.**

**நெருக்கடி காலத்தில் ஓராண்டு சிறைவாசம் இருந்தவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் “கலைஞர் விருது” பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இராணிப்பேட்டை மாவட்டம் மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.ஆர்.ரவிச்சந்திரன்–சுமதி ஆகியோரின் மகன் திருமண நிகழ்ச்சியில் கைத்தறி(ம) துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். நிகழ்ச்சியில் அரக்கோணம் நகர செயலாளர் வி.எல்.ஜோதி,ஏ.கே.சுந்தரமூர்த்தி, மு.கண்ணையன்,ஆர்.தமிழ்ச்செல்வன், அ.அசோகன்,எ.அன்புலாரன்ஸ்,பூக்கடை என்.அரிகிருஷ்ணன், எம்.சிவானந்தம், துரைமஸ்தான்,கே.பசுபதி,அரிதாஸ்,நகர மன்ற துணை தலைவர் எ.கலாவதி அன்புலாரன்ஸ்,கோ.வ.தமிழ்வாணன்,விமல், வி.மோகன்,எஸ்.எழிலரசு, எஸ்.தேவராஜ்,தே.தினேஷ்,பி.பாலாஜி,ஆர்.மணிகண்டன்,ஜென்ரல் ஆர்.மாது, வழக்கறிஞர்கள் வீரராகவன், ஆர்.லோகாபிராமன், எ.பிலால், ஆர்.வினோத், அ.அருண்லாரன்ஸ், சைதை மோகன், தமிழரசு மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் பேரில் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரை போட்டிகளை மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., துவக்கி வைத்து பேசினார். உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கலாநிதி, பகுதி செயலாளர்கள் மருது பாண்டியன், சசிக்குமார், கவுரிசங்கர், மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கேசவன், கதிரவன், சரவணன், அபிதா, முரளி மற்றும் கழகத்தினர் மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர்

# ஆழித்தேரோடிய திருவாரூரில் “முத்தமிழ்த்தேர்” பவனி!

## பூண்டி கே.கலைவாணன் முன்னிலையில் பொதுமக்கள் வரவேற்றனர்!

திருவாரூர், நவ. 20 -

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் பேருந்து நிலையம், காட்டூர் கலைஞர் கோட்டம், திருவாரூர் பழைய பேருந்துநிலையம் மற்றும் நீடாமங்கலம் ஆகிய பகுதிகளில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, “முத்தமிழ்த் தேர்” என்ற அலங்கார ஊர்தி திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி, மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னிலையில் வரவேற்று, முத்தமிழ்த்தேரின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு கழக நிர்வாகிகளும் பொது மக்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ ,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயகுமார், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, அனைத்து தரப்பு மக்களுக்கும் ஒரு நிலையான பங்களிப்பைத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 12நூற்றாண்டு விழா குழுக்கள் அமைக்கப்பட்டன. அதில், “எழுத்தாளர்கலைஞர்” குழு, படைப்புலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில் இன்றைய இளம் தலைமுறையினருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத் தன்மையினை எடுத்து செல்லும் வகையில், எழுத்தாளர் கலைஞர் குழுவின் மூலம் அவரது புகழ்பாடும் “முத்தமிழ்த்தேர்” அலங்கார ஊர்தி 04.11.2023 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி அனைத்து மாவட்டத்திற்கு சென்று கடைசியாக 04.12.2023 அன்று சென்னையில் முடிவடையும். இவ்வாகனம் திருவாரூர் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளது. இந்த வாகனம் “எழுத்தே எனது மூச்சு, எழுதுவதே எனது தினப்பழக்கம்” என்று முழங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய பேனா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் தமிழ் சமூகத்திற்கு படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்லும் வகையில் “முத்தமிழ்த் தேர்” அலங்கார ஊர்தி அனைத்து மாவட்டங்களிலும் காட்சிப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

கலைஞர் அவர்களின் அவர்களின் சிறப்புகளை விளக்கும் குறும்படமும் தொடர்ந்து திரையிடும் வகையில் ஒளித்திரையும் அமைக்கப்பட்டுள்ளது. பேனா வடிவிலான இந்த வானகத்தின் பின்புறம் இயந்திரத்தினால் திறந்து மூடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கார ஊர்தியினை பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவரும் சென்று பார்வையிடும் வகையில் வாகனத்தின் உள்ளே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கோபாலபுர இல்ல உள்அமைப்பு தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளே அஞ்சுகம் அம்மாள் அவர்களின் உருவச்சிலையும் அதன் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கையில் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு வடிவம் கொடுக்கும் அவரது படைப்புகளும், அவரது பன்முகத் தோற்றத்தினை விளக்கும் ஒலி, ஒளி அமைப்பும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கலைஞர் அவர்களின் எழுத்துகளால் உயிர்ப்பெற்ற கவிதை, கட்டுரை, புதினங்கள், காப்பியங்கள் போன்றவற்றை கைப்பேசி வாயிலாக இன்றைய இளம் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்திற்கு வருகைப்புரிந்த முத்தமிழ் தேரினை பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் மலர்தூவி வரவேற்றனர்.

பள்ளி மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. முத்தமிழ் தேரினை 5000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுகளில் நகர செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ், நகர்மன்ற தலைவர் புவனப்பரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள்,

ஒன்றியக்குழு தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும்

# டீசல்அளவு 19,000 லிட்டராக உயர்வு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 20-

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கை: மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும் வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து உயர்ந்து வரும் டீசல் எரியெண்ணெய் விலையினால் மீன்பிடி தொழில் லாபகரமானதாக இல்லை என்பதால், மீனவர்களின் வாழ்வாதாரமான மீன்பிடி தொழிலை தொடர்ந்திடும் வகையில், தற்போது வழங்கப்பட்டு வரும் மானிய டீசல் எரியெண்ணெய் அளவினை உயர்த்தி வழங்க அரசுக்கு பல்வேறு மீனவ சங்கங்கள் கோரிக்கைகள் அளித்துள்ளன.

அவர்களின் கோரிக்கையினை ஏற்று, 18.8.2023 அன்று ராமநாதபுரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகளுக்கு வழங்கப்படும், விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அளவினை, படகு ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு 18,000 லிட்டரில் இருந்து 19,000 லிட்டர் வீதமும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு படகு ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 4,000 லிட்டரில் இருந்து 4,400 லிட்டர் வீதமும் உயர்த்த வழங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்பினை 2024-2025ம் ஆண்டு முதல் செயல்படுத்தும் விதமாக நேற்று முந்தினம் அரசாணை வெளியிட்டுள்ளது. இதன்மூலம் 4,500 விசைப்படகு மீனவர்களும் 13,200 நாட்டுப் படகு மீனவர்களும் பயன் பெறுவார்கள்.

# தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, நவ.20-

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் இலங்கை பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யவாய்ப்புள்ளது. இன்று கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ராமநாதபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நீட் தேர்வுக்கு எதிரான மாபெரும் கையெழுத்து இயக்கம். சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆதம் சாகிப் தெருவில் உள்ள மஸ்ஜிதே பர்குந்தா பள்ளி வாசலில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தலைமையில், சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் இளைய அருணா முன்னிலையில் பொதுமக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது. இந்நிகழ்வில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில துனைச் செயலாளர்கள் க.ரஃபி அகமது, ஷேக் அப்துல்லா, சென்னை வடக்கு மாவட்ட தலைவர் சி.தமிமுன் அன்சாரி, மாவட்ட அமைப்பாளர் அப்துல் ரகுமான், துணை அமைப்பாளர்கள் கோபி, சண்முகம், வேலு. பகுதிச் செயலாளர் சுரேஷ், , வட்டச் செயலாளர்கள் புகழேந்தி, கண்ணன், வழக்கறிஞரணி மாவட்ட அமைப்பாளர் தணிக்கை நாதன், மாணவரணி அமைப்பாளர் சத்திய நாராயணன், மகளிரணி அமைப்பாளர் திருமிகு. ஆர்.வி.இலட்சுமி வேல், இளைஞரணி துணை அமைப்பாளர் சோமசுந்தர மூர்த்தி, மற்றும் தலைமை கழக உறுப்பினர் நரேந்திரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில் 6,850 பேருக்கு ரூ.51.31 கோடியில்

# நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - செ.இராமலிங்கம் எம்.பி. பங்கேற்பு!

நாகை. நவ.20-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை ஏ.வி.சி.திருமண மண்டபத்தில் மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் 70 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது.

விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார். விழாவில் 6,850 உறுபினர்களுக்கு ரூ. 51 கோடியே 31 லட்சம் மதிப்பிலான நலதிட்ட உதவிகளை சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கி பேசுகையில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் இருந்தாலும் தமிழ்நாட்டில் கூட்டுறவு துறை விவசாயிகளுக்காகவும், ஏழை, எளியவர்களுக்காவும், மிக சிறப்பாக செயல்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு. 70 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களானது தமிழ்நாட்டில் 2004-2025 ஆண்டுகளில் அப்போது இருந்த ஆட்சியாளர்கள் செய்த குளறுபடிகளால் தமிழ் நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை திவாலாகி மூடப்பட்டது.

2005 கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கவில்லை. அப்போது கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றியவர்களுக்கு சம்பளமே எடுக்க முடியாமல் வேலை விட்டு நின்று விட்டார்கள்.

அதன் பின் 2006 ம் ஆண்டு முத்தமிழ் கலைஞர் ஆட்சி வருகிறது. அப்போது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற உடன் யாரும் செய்யாத மகத்தான சாதனையாக தமிழ் நாட்டில் இருக்கின்ற22 லட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாய கடனை தள்ளுபடி செய்த தலைவர் முத்தமிழ் கலைஞர் அவர்கள் மட்டுமே. கடன் தள்ளுபடி செய்யப்பட்டதால் கூட்டுறவு வங்கிகளில் இருந்து விலை விட்டு சென்றவர்கள் மீண்டும் வேலையில் சேர்ந்தார்கள். மீண்டும் வங்கிகள் செயல்பட தொடங்கியது. ரூ. 7 ஆயிரம் கோடி என்பது தள்ளுபடி என்று அறிவித்ததோடு இல்லாமல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆண்டுக்கு ரூ.1,500 கோடி என்று 5 ஆண்டுகாலம் கூட்டுறவு சங்களுக்கு வழங்கி, யார் எல்லாம் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றவர்களுக்கு வங்கியில் கடன் நிலுவை எல்லை என்ற சான்றிதழும் வாங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கடந்த ஆண்டு 2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாய கடனாக ரூ. 10 ஆயிரம் கோடிக்கும் மேலாக வழங்கி உள்ளார்கள்.

அப்போது ஒன்றியத்தில் ஆட்சியில் இருந்து காங்கிரஸ் கட்சியின் பிரதமராக இருந்து மன்மோகன்சிங் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் தள்ளுபடி செய்ததை முன்உதாரனமாக வைத்து அதன் அடிப்படையில் இந்தியாவில் உள்ள விவசாயிகள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடன்களை 72 ஆயிரம் கோடி கடனை தள்ளுபடி செய்து விவசாயிகளை காப்பாற்றினார்கள். மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்ற கூடிய அரசாக இன்றைய அரசு உள்ளது. குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் 5 பவுனுக்கு குறைவாக நகைக் கடன் பெற்றுள்ளவர்களின் நகைக்கடன் தள்ளுபடி செய்யப்படும் என் அறிவித்தார்கள்.

அதன் படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 ஆயிரத்து 13 கோடி மதிப்பிலான நகைக் கடன் தள்ளுபடி செய்து அதன் மூலம் தமிழ்நாட்டில் இருக்கின்ற 13 லட்சத்து 12 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற்றார்கள். தமிழ்நாட்டில் 1 லட்சத்து 17 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.2ஆயிரத்து 715 கோடி கடனுதவிகளை தள்ளுப்படி செய்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்.

இதன் மூலம் 15 லட்சத்து 88 ஆயிரம் மகளிர் குழு உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளார்கள். மயிலாடுதுறை மாவட்டத்தில் 1217 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.13 கோடியே 70 லட்சம் கடன் தள்ளுப்படி செய்யப்பட்டுள்ளது. இன்றைய தினம் 6 ஆயிரத்து 850 உறுப்பினர்களுக்கு ரூ. 51 கோடியே 31 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.86 கோடி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கி உள்ளார்கள்.

விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கடனுதவிகளை வாங்கி அவர்களுக்கு எல்லா வகையிலும் பக்க பலமாக கூட்டுறவு துறை செயல்பட வேண்டும். மயிலாடுதுறை மாவட்டத்திற்கு தேவையான அனைத்து நலத்திட்டங்களையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் யாரும் செயல்படுத்தாத திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் குடுமப தலைவிகளுக்கு மாதம் ரூ. 1000 வழங்கப்பட்டு வருகிறது. அதன் படி 1 கோடிய 13லட்சத்து 84 ஆயிரத்து300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்பட்டுத்தபட்டுள்ளது. மாதாமாதம் ரூ. 1,000 குடும்பத் தலைவிகளுக்கு வழங்கி அனைத்து தரப்பு மக்களுக்கும் இத் திட்டத்தை கொண்டு சேர்த்துள்ளார்கள். தமிழ்நாட்டில் மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று எல்லா நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுசூழல் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுததுறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பேசினார்.

அதைத் தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட கூடிய கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களை வழங்கியும், கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் பேட்டியில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை அமைச்சர் சிவ.வி.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் ஆகியோர் வழங்கினார்கள்.

விழாவில் மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (ஏ) ஏன். செல்வராஜ், ம.சுப்பராயன்,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளைய பெருமாள், மங்கை எம். சங்கர், ஞான.இமையநாதன், ப.முருகமணி, கு. வைத்திய நாதன், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், ஏ.ஆர். ராஜா,மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள் காமாட்சிமூர்த்தி, ஜெயபிரகாஷ், மகேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் பி.கென்னடி, காந்தி, நத்தம் வின்சென்ட், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம். கே.மருது, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தியாக.விஜயேஸ்வரன், சார்பு அணி இரா.மனோகரன் ராஜ்குமார் மற்றும் சுரேஷ், ரஜினி, முருகன், விவசாய அணி கோபி உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எவரெஸ்ட் மு. கணேசன்**

**நவம்பர் 20 (2011)**



பள்ளி பருவத்திலேயே இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

தி.மு.க. இளைஞர் அணி துவங்கிய நாளிலிருந்து இளைஞர் அணியின் வளச்சிக்கு பணியாற்றிய அவர், ஈரோடு மாவட்டத்தின் முதல் இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, தொடர்ந்து மூன்று முறை அப்பொறுப்பை வகித்தவர்.

தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர். 1989ஆம் ஆண்டு கழக அரசின் சாதனை விளக்க இளைஞர் அணி பேரணியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக தலைவர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்றார்.

ஈரோடு மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் இளைஞர் அணி கிளையை அமைத்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**





கழக இளைஞர் அணி 2ஆவது மாநில மாநாடு சேலத்தில் வரும் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், மாநாட்டுக்குழுவின் செயலாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநாட்டின் வரவேற்புக்குழு, மேடை நிர்வாகக்குழு, பேச்சாளர் குழு உட்பட அனைத்துக் குழுக்களின் செயலாளர்கள், மாநாட்டின் பணிகள் முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

### பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

# கிருஷ்ணகிரியில் முன்னாள் எம்.எல்.ஏ., பி.முருகன் இல்ல மணவிழா!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்

கிருஷ்ணகிரி, நவ.20-

கிருஷ்ணகிரியில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி முருகன் மகள் திருமண விழா நடைபெறுகிறது.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட துணை செயலாளரும், வேப்பனபள்ளி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பி.முருகன் அவர்களது மகள் மருத்துவர் கனிமொழி என்கிற ஜெய்ஸ்ரீ மணமகன் மருத்துவர் நவீன் குமார் ஆகியோரது திருமண விழா வருகிற 23.11.2023 வியாழக்கிழமை காலை 11 மணி அளவில் கிருஷ்ணகிரி அருகே உள்ள குந்தாரப்பள்ளி குமரன் மஹாலில் கழக தலைவவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த திருமண நிகழ்ச்சிக்கு கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன்,

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய் பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்ற உள்ளார்கள்.

தமிழக அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள்

கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்கள், தலைமை கழக செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்

கிருஷ்ணகிரி மேற்கு, கிழக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,

கழக நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில உரிமை மீட்பு இரண்டாவது மாநில மாநாட்டிற்கான' இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை கடந்த 15 ஆம் தேதி கன்னியாகுமரி – திருவள்ளுவர் சிலை முன்பாக தொடங்கி வைத்த தறிவோம்! இந்த இருசக்கர வாகனப் பேரணி தமது திருவெறும்பூர் தொகுதி வருகை புரிந்ததையொட்டி திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இரு சக்கர வாகனங்களில் வந்த இளைஞர்களை வரவேற்று திருவெறும்பூர் தொகுதிக்கான பிரச்சாரத்தை கொடியசைத்து தொடங்கி வைத்து பிரச்சாரத்தில் கலந்து கொண்டார். உடன் இரு சக்கர வாகனப் பிரச்சார ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ் மாறன் மற்றும் கலைஞர் மண்டலப் பொறுப்பாளர்கள் பர்மா ரூபன், கடலூர் முத்துக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# தென்னிந்திய அளவிலான கபாடி - கால்பந்து போட்டி!

## அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ.20

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தென்னிந்திய அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளும் மாபெரும் கபடி மற்றும் கால்பந்து போட்டி நடைபெறுகிறது என்று மாவட்ட செயலாளர், அமைச்சர் சி.வெ. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தென்னிந்திய அளவிலான ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியே பங்குபெறும் மாபெரும் கபடி மற்றும் கால்பந்து போட்டிகள் வரும் (24.11.2023) முதல் (26.11.2023) வரை நெய்வேலி சூப்பர்பஜார் பின்புறம் நடைபெறுகிறது.



இப்போட்டியில் வெளி மாநிலங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் இருந்தும் விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

அது சமயம் மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற இன்னாள் முன்னாள் உறுப்பினர்கள் கழக செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக நகர கழக பேரூர் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பிக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.




### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில்

# உத்திரமேரூரில் இளைஞர் எழுச்சி நாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! கெ.ஞானசேகரன் வரவேற்பு!

காஞ்சிபுரம், நவ.20-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு, மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (20.11.2023 - திங்கள்கிழமை) மாலை 5 மணிக்கு, கே.எம்.ஆர். பேருந்து நிலையம் அருகில் உத்திரமேரூரில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

ஒன்றியக் கழகச் செயலாளர் கெ.ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில் மாலட்ட துணைச் செயலாளர் க. செல்வம் எம்.பி., இரா. நாகன், ஒன்றியச் செயலாளர் டி.குமார், பொ.சசிகுமார், ஹேமலதா ஞானசேகரன், வசந்திகுமார், மா.ஏழுமலை, பெ.மணி, இளமதி கோவிந்தராஜ், பத்மா பாபு, டாக்டர் வி. திவாகர், கோ.காளிதாஸ், ஏ.கே.ரமேஷ்பாபு, டி.கே. கோபாலகிருஷ்ணன், கே.தயாளன், தே.வீராசாமி, எம்.ஆர்.தாமஸ், ஏ. மூர்த்தி, ஆர்.மணி, இ.கண்ணாயிரம், லோ.பவ்யா, து.சுந்தர், மு.தாமோதரன், தா.சுப்பராயன், எஸ்.ருத்தரகோட்டி, சு.சுகுணா, சுந்தர்ராஜன், ஏ.எம்.கெங்கன், தே.பாபு, டி.எஸ்.குமாரதேவ், இரா.கார்த்திகேயன், க.மாய கிருஷ்ணன், து.ரமேஷ், ஏ.வீரமணி, ஆ.ஜெயகாந்தா, ப.மகேந்திரன், க.அப்துல் அக்கீம், வெ.கோவிந்த ராஜ், வெ. குணசேகரன், மா. கருணாநிதி, ஏ.செல்லமுத்து, வி. ராஜபாண்டி, ஆ.நீல கண்டன், இ.மனோகரன், ம.சத்தியா மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

வெ.கோவிந்தராஜ் நன்றி கூறுகிறார்.

### இலண்டன்-முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் - கலைஞர் அயலக உடன்பிறப்புக் குழு சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு காணொலிக் கூட்டம்!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி. சிறப்புரை!

இலண்டன், நவ.20-

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம் லண்டன் மற்றும் கலைஞர் அயலக உடன் பிறப்புக்கள் குழு நடத்தும் 100 காணொலி கூட்டத்தொடரில் நாளை (21.11.2023-செவ்வாய்க் கிழமை) இந்திய நேரம் மாலை 7:30 மணிக்கு நடைபெற உள்ள 50வது காணொலிக் கூட்டத்தில் தி.மு.க அயலக அணிச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான. எம்.எம். அப்துல்லா கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இக்காணொலிக் கூட்டத்தில் முத்தமிறிஞர் கலைஞரின் சாதனைகள்,சமூக நீதிக்கென அவர் நிகழ்த்திய போராட்டங்கள்,அயலகத் தமிழர்களுக்கென அவர் செய்த சாதனைகளை எடுத்துரைக்கிறார்.

மேலும் வரும் 2024 ஜனவரி மாதம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கவிருக்கும் அயலக தமிழர் தின நிகழ்ச்சிகளை யும் தற்போதைய தி.மு.க அரசு அயலக தமிழர்களுக்கு செய்துள்ள பல நன்மைகள் பற்றியும் உரையாற்றுகிறார்.உலகெங்கும் வாழும் தமிழர்கள், அயலக அணி தி.மு.க.வினர் இக்காணொலிக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

இக்காணொலிக் கூட்டத்தை வெளிநாடு வாழ் தமிழர் நலச் சங்கச் செயலாளரும்முத்தமிழறிஞர்கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையத் தலைவருமான லண்டன் அ. செந்தில்குமார் ஒருங்கிணைக்கிறார்.

# திராவிட மாடல் அரசு 43

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரும் ‘கரன்ட்!’

*நவம்பர் மாத அடை மழைக்கு அஞ்சுபவர்களைவிட ‘கரன்ட் போயிருமோ...’ என்ற கலக்கத்தில் இருப்பவர்கள்தான் இங்கு அதிகம். மழைக்காலம் என்றாலே மருத்துவமும் மின்சாரமும் இன்றியமையாதத் தேவைகள் ஆகிவிடுகின்றன. மின்வெட்டு, மின் தடங்கல், வோல்டேஜ் குறைவது, ஃப்யூஸ் போவது, மின் மாற்றிகள் வெடிப்பது என மின்சாரம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் இந்தக் காலத்தில் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.*

*அதுவும் பண்டிகைக் காலங்களில், வீடுகளில் அதிக அளவு மின்சாரப் பயன்பாடு இருக்கின்ற சூழலில், மழையும் காற்றும் தங்களின் கைவரிசையைக் காட்டினால், மேற்கண்ட பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கையே. அந்தப் பிரச்சினைகள் எவ்வளவு விரைவாகத் தீர்க்கப்படுகின்றன என்பதில் உள்ளது மக்கள் மீதான அரசின் அக்கறை.*

*நம் கழக அரசு 2021-ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்கும் வரையில், மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளை உள்ளூர் மின்வாரிய அலுவலகங்களுக்கு நடையாக நடந்து, லைன்மேன்களைக் கெஞ்சிக் கூத்தாடி கூட்டிக்கொண்டு வந்து பழுதுகளைச் சரிசெய்யும் நிலை இருந்தது. அந்த அலைச்சலுக்குப் பயந்தே பலர், ‘கரன்ட் அதுவா வரும்போது வரட்டும்’ என்று முடங்கியிருந்தார்கள். அப்படி முடங்கியிருந்தவர்களின் குரலுக்கு ‘மின்னகம்’ மூலம் செவி சாய்த்திருக்கிறது நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’.*

### தலைமைக்குத் தெரியும் மக்கள் குறைகள்

*ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் முக்கியமானது. அந்த மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து, மக்களின் கருத்துகளை நேரடியாக அறிந்துகொள்ள விரும்பினார் நம் தலைவர். அதை எப்படி மேற்கொள்வது? ஒவ்வோர் இடத்துக்கும் சென்று அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்பதைவிட, அந்தக் கருத்துகளை, குறைகளை எல்லாம் ஒரே இடத்தில் ஒருங்கிணைத்தால் அடுத்தடுத்த நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள முடியும். அந்த எண்ணத்தில் பிறந்ததுதான் **‘மின்னகம்-மின் நுகர்வோர் சேவை மையம்’**. 2021 ஜூன் 20 அன்று, கழகத் தலைவர் முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.*

*தமிழ்நாட்டில் 44 மின் பகிர்வு மாவட்டங்கள் இருக்கின்றன. மின்னகம் தொடங்கப்படுவதற்கு முன்பு வரை, நுகர்வோர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிப்பதற்கு 1912 என்ற சேவை எண் செயல்பாட்டில் இருந்தது. அந்த எண்ணுக்குத் தொடர்புகொண்டால், குறிப்பிட்ட அந்த மின் பகிர்வு மாவட்டத்துடன் அந்தக் குறை கையாளப்படும். அது மின்சாரத் துறை அமைச்சருக்கோ அல்லது முதல்வருக்கோ தெரியாது. ஆனால், மின்னகம் தொடங்கப்பட்ட பிறகு, சென்னையில் உள்ள ‘மின்னகம்’ மையத்தில், மாநிலம் முழுமையும் இருந்து குறைகள் தெரிவிக்கப்படுவதால், எந்த இடத்தில் என்ன வகையான பிரச்சினை, எப்போதெல்லாம் ஏற்படுகிறது, அவற்றுக்கு எப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை, துறைசார் அமைச்சரும் முதல்வரும் அறிந்துகொள்ள முடிகிறது.*



*இவ்வாறு, மக்களின் குறைகளை அமைச்சரும் முதலமைச்சரும் நேரடியாக அறிய முடிகிறது என்ற விஷயமே மடுவுக்கும் மலைக்குமான வித்தியாசத்தை எடுத்துக்காட்டுகிறது. 24 மணி நேரமும் மக்களுடன் தொடர்பில் இருக்கிற தலைமை என்கிற நடைமுறை, சிறந்த ஆட்சிக்கான ‘மாடல்!’. மின்சாரம் சார்ந்த பிரச்சினைகளை எதிர்க்கட்சி எப்படிக் கையாண்டது, தி.மு.க. அரசு எப்படிக் கையாள்கிறது என்பதற்கு இந்தத் திட்டமே சான்று.*

### குறைகள் களையும் தொழில்நுட்பத் துல்லியம்

*‘ஸ்விட்சைத் தட்டினால் பல்பு எரிகிறது’ என்பதுதான் இங்கு மின்சாரம் குறித்து பலரின் புரிதல். ஆனால், ஸ்விட்சை தட்டும் அந்தக் கண நேரத்துக்கும், பல்பு எரியத் தொடங்கும் அந்த கண நேரத்துக்கும் இடையில், எண்ணற்ற விஷயங்கள் நடைபெறுகின்றன. அது அறிவியல். அதுபோன்ற அறிவியல் துல்லியத்துடன் இயங்குகிறது ‘மின்னகம்’ மையம்.*

*இந்த மையத்தின் எண்: 94987-94987 என்பதாகும். இதற்கு முன்பு வரை, நுகர்வோர் சேவைக்கென்று, அது எந்தத் திட்டமாக இருந்தாலும், அவற்றுக்கு ‘டோல் ஃப்ரீ’ எண் கொடுக்கப்படுவதுதான் நடைமுறை. இந்தியா முழுக்க, இதுதான் நிலைமை. ஆனால், நாட்டிலேயே முதல்முறையாக நுகர்வோர் சேவைக்கென்று, கைப்பேசி எண் உள்ள திட்டம் ‘மின்னகம்’தான். ஒரே சமயத்தில் பல அழைப்புகளை இந்த எண்ணில் பெற முடிகிற ‘சாஃப்ட்வேர்’, ‘சர்வர்’ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*இதனால், தமிழ்நாட்டின் எந்த மூலையிலிருந்து அழைத்தாலும், அந்த அழைப்பு முதலில் சென்னையில் உள்ள ‘மின்னகம்’ தலைமை மையத்தில் பெறப்பட்டு, பிறகு குறிப்பிட்ட மின் பகிர்வு மாவட்டங்களில் உள்ள உதவிப் பொறியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நுகர்வோர் ஒருவர் தனது குறையைச் சொல்லிவிட்டு, அழைப்பைத் துண்டித்த மறுகணமே குறிப்பிட்ட மின் பகிர்வு மாவட்டத்தில் உள்ள பணியாளர் ஒருவர் நுகர்வோரைத் தொடர்புகொண்டு அவரது குறை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்துத் தகவல் தெரிவிப்பார். தொடர்ந்து, அந்தப் பிரச்சினை சரிசெய்யப்பட்ட பின்னரும், உதவிப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து நுகர்வோரைத் தொடர்புகொண்டு, ‘சேவை திருப்தியாக இருந்ததா’ என்று கேட்பார். நுகர்வோரின் பிரச்சினை தீர்க்கப்பட்டு, சேவை திருப்திகரமாக இருந்தால் அந்தப் பிரச்சினை முடித்து வைக்கப்படும். இல்லை என்றால், அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

### புகார்கள் 21 இலட்சம்... திருப்தி நூறு சதவிகிதம்...

*இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் தீர்வு காணப்படாத குறைகளை, ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் ஒரு முறை மின்சாரத் துறை அமைச்சரால் ஆய்வு செய்யப்பட்டு, அந்தக் குறைகள் தொடர்புடைய மின் பகிர்வு மாவட்ட மின் துறை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விவரங்களைக் கேட்டறிந்து, மேற்கொள்ள வேண்டிய பணிகள் முடுக்கிவிடப்படுகின்றன.*

*இப்படி ‘மின்னகம்’ மையம் மூலமாக, இந்தச் சேவை தொடங்கப்பட்ட நாள் முதல் இப்போது வரை சுமார் 21 இலட்சம் புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் சில ஆயிரம் புகார்கள் தவிர, மற்ற அனைத்துப் புகார்களிலும் நூறு சதவிகித நுகர்வோர் திருப்தி என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளது. தீர்வு காணப்படாத புகார்களுக்கும் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நுகர்வோர் சேவை மையம் தொடங்கப்பட்டு, பெறப்பட்ட 10 இலட்சமாவது புகார்தாரரிடம் நமது முதலமைச்சரே தொலைபேசி வழியாக உரையாடி, அவரது குறைகளைக் கேட்டறிந்தார்.*

*‘திராவிட மாடல் அரசு’ அறிமுகப்படுத்திய இந்தத் திட்டத்தைப் பின்பற்றி, தற்போது ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் இது போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மின்னகத்தின் வெற்றி சொல்வது ஒன்றைத்தான்... இந்தியாவுக்கு விடியல் தமிழ்நாட்டில் இருந்துதான்!*

**...சாதனை தொடரும்**




### ‘மின்னகம்’ முளைத்தது... ‘விடியல்’ பிறந்தது..!’

மின்னகத்துகாக 8 மாநிலங்களில் இருந்து 109 கணினிகள் வாங்கப்பட்டன. அடுத்தபடியாக, இந்தத் திட்டத்துக்கான மென்பொருட்கள் உருவாக்கப்பட்டன. தொடர்ந்து, பி.எஸ்.என்.எல். நிறுவனத்துடன் இணைந்து இந்தத் திட்டத்துக்குத் தேவைப்படும் ‘எஸ்.ஐ.பி. (ஸிப்) சர்வர்’ அமைக்கப்பட்டது. இந்தப் பணிகளுக்கு இடையே, ஒரு மின் பகிர்வு மாவட்டத்துக்கு 4 பணியாளர்கள் வீதம், 44 மாவட்டங்களுக்கு 176 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அது தவிர, ‘மின்னகம்’ திட்ட தலைமையிடத்தில் 207 பணியாளர்கள் என, மொத்தம் 383 பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, 24 மணி நேரமும் இந்த மையம் இயங்கி வருகிறது.

- பெறப்பட்ட புகார்கள் : **21,37,464**
- தீர்வு காணப்பட்ட புகார்கள் : **21,28,612**
- தீர்வு காண முயற்சிக்கப்படும் புகார்கள் : **8,852**
- தீர்வு காணப்படும் சதவிகிதம் : **100**
- கையாளப்படும் புகார்களின் வகைகள் : **36**

## ஆங்கிலத்தில் வ.உ.சி.

தேசிய விடுதலை இயக்க வரலாற்றாசிரியர்களால் ‘இருண்ட மாகாணம்’ என்று சொல்லப்பட்ட மெட்ராஸ் மாகாணத்தில் எரி நட்சத்திரம் போல் தென்கோடியில் தேசிய விடுதலைக்காகச் செயல்பட்டவர் **‘கப்பலோட்டிய தமிழன்’** என்று அறியப்படும் வ.உ.சிதம்பரம் அவர்கள்.




வ.உ.சி.யின் 150-வது பிறந்த ஆண்டையொட்டி, தமிழில் முன்னெப்போதையும்விட கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர் குறித்து நிறைய புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில், ‘வ.உ.சி.யும் காந்தியும்: 347 ரூபாய் 12 அணா’, வ.உ.சியின் சிவஞான போத உரை’, ‘திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும்’, ‘வ.உ.சி: வாராது வந்த மாமணி’ ஆகிய நூல்களை எழுதிய வரலாற்றாசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி, தற்போது வ.உ.சி. குறித்து ஆங்கிலத்தில் நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். தமிழிலேயே தற்சமயம்தான் வ.உ.சி. குறித்து, புத்தகங்கள் அதிக அளவில் வருகின்றன என்கிற நிலையில், ஆங்கிலத்தில் அவர் குறித்து வெளியான நூல்கள் என்றால், பூஜ்யம்தான். இந்தக் குறையைப் போக்கும் வகையில், இந்த ஆண்டின் இறுதியில், தமிழ்நாடு அரசின் பாரதி விருது பெற்ற வேங்கடாசலபதியின் ‘Swadeshi Steam: V.O. Chidambaram Pillai and the Battle against the British Maritime Empire’ என்ற நூல் வெளியாகவுள்ளது.

விரிவான அடிக்குறிப்புகளோடு 500 பக்கங்கள் கொண்ட இந்நூல் தமிழ்நாட்டின் சமூக நீதிப் போராட்டங்களை அறிய தொடங்கி இருக்கும் இந்திய ஒன்றியத்துக்குத் தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றை உரக்கச் சொல்லப் போகிறது.

## :ப்ளாஷ்பேக்



### இயல்பான பண்பு!



விஜயகுமார்

இன்றைய கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதி அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது கோவை மாவட்டத்துக்கு வருகை தந்தார். 1995-ஆம் ஆண்டு டிசம்பர் 24 அன்று கோவை மாவட்டத்தில், சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு மாலை நேரத்தில் சர்க்கார் சாமக்குளத்தில் கழகக் கொடியேற்றும் நிகழ்வில் தலைவர் தளபதி அவர்கள் பங்கேற்றார். கழகத் தோழர்களிடம் இயல்பாகப் பழகிய பண்பு எங்களை எல்லாம் கவர்ந்தது. அப்போது கிளைக் கழகப் பொருளாளராக இருந்த எனக்கு, அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு அமைந்ததை எண்ணி மகிழ்கிறேன்.

**-அ.விஜயகுமார், கிளைக்கழக முன்னாள் பொருளாளர், கோவை வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### எத்தகைய தியாகத்துக்கும் தயார்

**1960 ஆம் ஆண்டு சென்னை கோடம்பாக்கத்தில் தி.மு.க சார்பில், இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வருகை தந்தனர். மாநாட்டை நாவலர் தொடங்கி வைத்தார். பேரறிஞர் அண்ணா தலைமை தாங்கினார். ‘‘இந்தித் திணிப்புப் போரில் எத்தகைய தியாகத்துக்கும் உடன்படக் கூடிய அளவுக்கு நீங்கள் உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்’’ என்ற அண்ணாவின் பேச்சு, கழகத்தினருக்கு உத்வேகம் அளித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 305




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131